# வருவாய்த் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2015 – 2016

மானியக் கோரிக்கை எண்.41 – வருவாய்த் துறை

மானியக் கோரிக்கை எண்.51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**ஆர்.பி. உதயகுமார்**
வருவாய்த் துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

2015

# பொருளடக்கம்


| பொருள் | பக்கங்கள் |
|---|---|
| முன்னுரை | 1–3 |
| வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு | 4–51 |
| நில நிர்வாகம் | 52–79 |
| நிலச் சீர்திருத்தம் | 80–107 |
| நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி | 108–117 |
| நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் | 118–151 |

# வருவாய்த் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2015–16

*"அனைத்து துறைகளுக்கும் தாய்த் துறையாகவும், அரசாங்கத்தின் முதுகெலும்பாகவும் ஏழை, எளிய மக்களின் துயரங்களைக் களைந்து அவர்களை ஏற்றிவிடும் ஏணியாகவும் விளங்குகின்ற வருவாய்த்துறையின் செயல்திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது. "*

*மாண்புமிகு முதலமைச்சர்*

## 1. முன்னுரை

இம்மாநிலத்தின் நிர்வாக அமைப்பில் வருவாய்த்துறை பழமையான துறைகளில் ஒன்றாக கருதப்படுகிறது. இத்துறை நிர்வாக அமைப்பின் முதுகெலும்பாக திகழ்வதோடு சமுதாய வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு பெரும்பங்கு வகிக்கிறது. ஏழை, எளிய மக்களின் துயரங்களை களைந்து ஏற்றிவிடும் ஏணியாக கீழ்க்கண்ட விரிவான நோக்கங்களுடன் இத்துறை செயல்பட்டு வருகிறது.

- ❖நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை சிறந்த முறையில் மக்களிடையே கொண்டு செல்வது
- ❖இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் நேரங்களில் மக்களின் இன்னல்களை துடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்
- ❖தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு நிலங்களையும் பாதுகாத்து முறையாக நில பதிவேடுகளை பராமரித்தல்
- ❖நிலசீர்திருத்த சட்டங்களை நடைமுறைபடுத்துதல் மற்றும் தகுதியான நபர்களுக்கு மிகைநிலம் வழங்குதல்

மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றிட மாநில அளவில் கீழ்க்கண்ட அலுவலகங்கள் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன.

- வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்புத்துறை ஆணையரகம்.
- நில நிர்வாக ஆணையரகம்.
- நிலச்சீர்திருத்த ஆணையரகம்.
- நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரகம்.
- நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம்.

மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் பல்வேறு அலுவலர்களுடன் இணைந்து மேற்கண்ட பணிகள் செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட ஆட்சியருக்கு உறுதுணையாக மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் துணை நிலை ஊழியர்கள் செயல்படுகிறார்கள்.

## 2. வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு

இத்துறை வருவாய்த்துறை அலுவலர்களின் பணியமைப்பு தொடர்பான பொருள்களை பிரதானமாக கையாள்வதோடு, வருவாய் நிர்வாகம் திறமையாகவும், பயனுள்ளதாகவும் செயல்பட தேவையான உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தித் தருகிறது. இத்துறை அம்மா திட்டம் (அனைத்து கிராமத்திலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்குதல்), சமூக பாதுகாப்புத் திட்டம், விலையில்லா வேட்டிகள்/ சேலைகள், மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் விநியோகித்தல் போன்ற முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பேரிடர் மேலாண்மை தொடர்பான நடவடிக்கைகளில் இத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

### 2.1 மாநிலத்தின் வருவாய் எல்லைகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி 110–இன் கீழ் 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை

கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் 4 லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட வட்டங்கள் பிரிக்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி கடந்த நான்காண்டு காலங்களில் அரசின் நலத்திட்டப் பணிகள் அனைத்தும் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையிலும், மக்களும் தங்களுக்குரிய வட்டத் தலைமையிடத்தினை எளிதில் சென்றடையும் வகையிலும் 4 புதிய கோட்டங்களும், 49 புதிய வட்டங்களும் தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ளது. இந்த அளவில் வட்டங்களைப் பிரித்து ஆணைகள் வெளியிடப்பட்டது என்பது வருவாய் நிர்வாகத்துறையின் வரலாற்றுச் சாதனையாகும். இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் 31.08.2015–ஆம் நாளன்று இந்த ஆண்டில் 5 புதிய வருவாய் கோட்டங்களும் 16 புதிய வட்டங்களும் ரூ.17.65 கோடி செலவில் உருவாக்கப்படும் என அறிவிப்பு செய்துள்ளார்கள்.

மாநிலத்தில் தற்போது 32 மாவட்டங்கள், 80 வருவாய் கோட்டங்கள், 269 வட்டங்கள், 1186 குறுவட்டங்கள் மற்றும் 16682 வருவாய் கிராமங்கள் உள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

## அட்டவணை 2.1 மாவட்டத்தில் உள்ள வருவாய் கோட்டங்கள், வட்டங்கள்/ குறு வட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரங்கள்

| வ. எண். | மாவட்டம் | வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கை | வட்டங் களின் எண்ணிக்கை | குறுவட்டங் களின் எண்ணிக்கை | வருவாய் கிராமங் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 2 | 3 | 15 | 175 |
| 2 | சென்னை | 0 | 10 | 40 | 55 |
| 3 | கோயம்புத்தூர் | 2 | 10 | 38 | 295 |
| 4 | கடலூர் | 3 | 9 | 32 | 883 |
| 5 | தருமபுரி | 2 | 5 | 22 | 470 |
| 6 | திண்டுக்கல் | 3 | 9 | 40 | 359 |
| 7 | ஈரோடு | 2 | 6 | 34 | 375 |
| 8 | காஞ்சிபுரம் | 4 | 12 | 67 | 1137 |
| 9 | கன்னியாகுமரி | 2 | 4 | 18 | 188 |
| 10 | கரூர் | 2 | 6 | 20 | 174 |
| 11 | கிருஷ்ணகிரி | 2 | 6 | 29 | 636 |
| 12 | மதுரை | 2 | 10 | 51 | 604 |
| 13 | நாகப்பட்டினம் | 2 | 8 | 31 | 523 |
| 14 | நாமக்கல் | 2 | 6 | 32 | 391 |
| 15 | பெரம்பலூர் | 1 | 4 | 11 | 152 |
| 16 | புதுக்கோட்டை | 3 | 12 | 45 | 757 |
| 17 | இராமநாதபுரம் | 2 | 8 | 38 | 400 |
| 18 | சேலம் | 4 | 12 | 44 | 631 |
| 19 | சிவகங்கை | 2 | 8 | 38 | 521 |
| 20 | தஞ்சாவூர் | 3 | 9 | 50 | 754 |
| 21 | நீலகிரி | 2 | 6 | 15 | 54 |
| 22 | தேனி | 3 | 5 | 17 | 99 |
| 23 | தூத்துக்குடி | 3 | 8 | 41 | 468 |
| 24 | திருச்சிராப்பள்ளி | 4 | 11 | 43 | 502 |
| 25 | திருநெல்வேலி | 3 | 13 | 60 | 559 |
| 26 | திருப்பூர் | 3 | 9 | 33 | 350 |
| 27 | திருவள்ளூர் | 4 | 12 | 54 | 706 |
| 28 | திருவண்ணாமலை | 2 | 10 | 52 | 1064 |
| 29 | திருவாரூர் | 2 | 7 | 27 | 500 |
| 30 | வேலூர் | 3 | 11 | 53 | 841 |
| 31 | விழுப்புரம் | 4 | 11 | 57 | 1459 |
| 32 | விருதுநகர் | 2 | 9 | 39 | 600 |
| | **மொத்தம்** | **80+5*** | **269+16**** | **1186** | **16682** |

* **5** புதிய கோட்டங்கள் உருவாக்கப்படவுள்ளன.

** **16** புதிய வட்டங்கள் உருவாக்கப்படவுள்ளன.

## 2.2 வருவாய் நிர்வாக பணியாளரமைப்பு

வருவாய் நிர்வாகத் துறையில் கிராம உதவியாளர் முதல் துணை ஆட்சியர் வரை 50,000—க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவற்றின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.2 வருவாய் நிர்வாக பணியாளரமைப்பு**

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | துணை ஆட்சியர் | 527 |
| 2 | வட்டாட்சியர் | 1612 |
| 3 | துணை வட்டாட்சியர் | 1998 |
| 4 | கண்காணிப்பாளர்/சுத்த நகல் கண்காணிப்பாளர் / உதவி கணக்காளர் | 41 |
| 5 | உதவியாளர் (வருவாய் ஆய்வாளர் உட்பட) | 6886 |
| 6 | இளநிலை உதவியாளர் | 3004 |
| 7 | தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சர் / காசாளர் / தொலைபேசி / நிகரி இயக்குபவர் | 1380 |
| 8 | ஓட்டுநர் | 888 |
| 9 | பதிவுரு உதவியாளர் / பதிவுரு எழுத்தர் / படிபெருக்கி இயக்குபவர் / நகல் எடுப்பவர் | 807 |
| 10 | அலுவலக உதவியாளர் | 3310 |
| 11 | காவலர் / மசால்சி / தோட்டக்காரர் / துப்புரவாளர் | 601 |
| 12 | கிராம நிருவாக அலுவலர் | 12614 |
| 13 | கிராம உதவியாளர் | 16998 |
| | **மொத்தம்** | **50666** |

## 2.3 கிராம நிர்வாகம்

கடந்த நான்கு ஆண்டுகளில், 8720 கிராம நிர்வாக அலுவலர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களுள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 6820

கிராம நிர்வாக அலுவலர்களும், கருணை அடிப்படையில் 1900 கிராம நிர்வாக அலுவலர்களும் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 2014–2015–ஆம் ஆண்டிற்கு 1477 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு அதில் 295 பணியிடங்கள் கிராம உதவியாளர்களுக்கு பதவி உயர்வு அளித்து கிராம நிர்வாக அலுவலர்களாக பணியமர்த்தவும், 369 பணியிடங்கள் கருணை அடிப்படையிலும் மீதமுள்ள 813 பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.3.1 பணித்திறனை மேம்படுத்த கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பயிற்சி**

கிராம நிர்வாக அலுவலர்களுக்கு 4 வார கால நில அளவைப் பயிற்சி மற்றும் 6 வார கால கிராம நிர்வாகம் தொடர்பான பயிற்சி என 10 வார கால பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியினை வழங்க அரசாணை (2டி) எண். 18, வருவாய்

[பணி.7(1)] துறை, நாள் **22.01.2013–இன்படி ரூ.1.03** கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**2.3.2 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினி, அச்சுப்பொறி வழங்குதல்**

14.11.2011 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களின் பணித்திறனை மேம்படுத்தவும், நலப்பணிகள் மக்களுக்கு எளிதில் விரைவாகச் சென்றடையவும் மடிக்கணினியுடன் அச்சுப்பொறியும் வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதன் முதற்கட்டமாக **7,787** கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினியுடன் அச்சுப்பொறி மற்றும் மடிக்கணினி பயிற்சி வழங்குவதற்காக அரசாணை (நிலை) எண்.**87**, வருவாய் [வ.நி.**2(2)**] துறை, நாள் **9.3.2012–இல் ரூ.22,48,88,560/–** நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேற்கண்ட அரசாணையின்படி **7,787** கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினியுடன் அச்சுப்பொறி ஆகியவை வழங்கப்பட்டதோடு அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் கணினி பயிற்சியும் அளிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக, அரசாணை (நிலை) எண்.**56,**

வருவாய் [வ.நி.2(2)] துறை, நாள் 20.1.2015–இல் 964 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினியுடன் அச்சுப்பொறி மற்றும் கணினி பயிற்சி அளிக்கும்பொருட்டு ரூ.3,30,84,769/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் மூன்றாம் கட்டமாக மீதமுள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினியுடன் அச்சுப்பொறி மற்றும் கணினி பயிற்சியும் அளிக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2.4 வருவாய் ஆய்வாளர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்**

அரசாணை (நிலை) எண்.408, வருவாய் [வ.நி.2(2)] துறை, நாள் 22.10.2013–இல் அரசால், வருவாய் ஆய்வாளர்களுக்கு மடிக்கணினி வழங்கும் பொருட்டு ரூ.2.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, 2014–2015–ஆம் நிதியாண்டில், 1,177 வருவாய் ஆய்வாளர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டு, கணினி பயிற்சியும் அளிக்கப்பட்டது.

**2.5 வருவாய்த்துறை அலுவலகக் கட்டடங்கள்**

மாவட்ட நிர்வாகத்தில் வருவாய்த்துறையின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் பணிச்சூழலை மேம்படுத்தும் பொருட்டும் பொதுமக்கள் எளிதாக அணுகிட உதவவும் வருவாய்த்துறைக்கு தேவைப்படும் அலுவலக

கட்டடங்கள்/ குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள் முன்னெப்போதும் இல்லாத அளவில் முன்னுரிமை அடிப்படையில் அரசால் அளிக்கப்பட்டு வருகிறது.

### 2.5.1 மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

தஞ்சாவூர், கடலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் ரூ.110.78 கோடி மதிப்பீட்டில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடங்கள் கட்ட 2011–2012 மற்றும் 2012–2013 ஆண்டுகளில் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் ரூ.67.93 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டவும் 2013–2014–ஆம் ஆண்டில் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 02.06.2015 அன்று திறந்து வைக்கப்பட்டன. மற்ற மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களின் கட்டுமான பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

### 2.5.2 வருவாய் கோட்ட அலுவலகக் கட்டடங்கள்

கடந்த நான்கு ஆண்டுகளில் தாம்பரம், அம்பத்தூர், உடுமலைப்பேட்டை, ஸ்ரீரங்கம், இலுப்பூர் மற்றும் சிதம்பரம்,

ஆகிய 6 வருவாய் கோட்டங்களுக்கு ரூ.8.14 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆணைகளை பிறப்பித்துள்ளது. இக்கட்டடங்கள் கட்டி முடித்த பின்னர் மாநிலத்தில் உள்ள 80 வருவாய் கோட்ட அலுவலகங்களுக்கும் அரசு கட்டடங்கள் இருக்கும்.

**2.5.3 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்**

2011–12 முதல் 2013–2014 வரை, புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட 34 வட்டங்களுக்கான வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் 25 பழைய கட்டடங்களுக்கு பதிலாக புதிய கட்டடங்கள் உள்ளிட்ட 59 புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் ரூ.125.59 கோடி செலவில் கட்ட அரசால் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 19 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கட்டடங்கள் பல்வேறு நிலைகளில் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

2014–2015–ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகம், திருவாரூர் மாவட்டத்தில், வலங்கைமான் மற்றும் நீடாமங்கலம் வட்டாட்சியர் அலுவலகங்கள், விருதுநகர் மாவட்டத்தில், சாத்தூர்

வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் ஈரோடு மாவட்டத்தில், பெருந்துறை வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய **5** வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு பழைய கட்டடங்களுக்கு பதிலாக புதிய கட்டடங்கள் கட்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, ஆத்தூர், சாத்தூர், வலங்கைமான் மற்றும் நீடாமங்கலம் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ரூ.**8.55** கோடி மதீப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.5.4 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்

மாநிலத்தில் மொத்தமுள்ள **1,186** வருவாய் ஆய்வாளர்களில், **1,095** வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. **29** புதிய குடியிருப்புடன் கூடிய வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் ரூ.**4.03** கோடி செலவில் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இவற்றில் **31.07.2015** வரை **13** கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் **2014–2015**–ஆம் ஆண்டில் **25** வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் ரூபாய் **3.62** கோடி செலவில் கட்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது.

### 2.5.5 கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள்

231 கிராம நிர்வாக அலுவலக கட்டடங்கள் ரூ.14.33 கோடி செலவில் கட்ட அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 31.07.2015 வரை 142 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது மாநிலத்தில் உள்ள 12,614 கிராம நிர்வாக அலுவலர்களில், 12,442 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு சொந்த கட்டடங்கள் உள்ளன.

முதன்முறையாக மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம நிர்வாக அலுவலகங்களையும் புனரமைத்திட முடிவு செய்து 2013–2014–ஆம் ஆண்டில் 5,000 கிராம நிர்வாக அலுவலகங்களை புனரமைத்திட தலா ரூ.50,000/– வீதம் ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 31.07.2015 வரை 4,530 அலுவலகங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும், 2014–2015–ஆம் ஆண்டில் 3,000 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களை புனரமைக்க தலா ரூ.50,000/–வீதம் ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 2.6. நில வருவாய்

தமிழ்நாட்டில் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| நில வகைபாடு | பரப்பளவு |
|---|---|
| நஞ்சை நிலங்கள் | 16,57,676 ஹெக்டேர் |
| புஞ்சை நிலங்கள் | 67,80,080 ஹெக்டேர் |

அரசாணை (நிலை) எண்.544, வருவாய் [வ.நி.1(1)] துறை, நாள் 20.10.2010–இன்படி தமிழ்நாட்டிலுள்ள பலவகையான நிலங்களுக்கு கீழ்க்கண்டவாறு நிலவரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | விவரம் | தொகை / ஹெக்டேர் |
|---|---|---|
| 1 | புஞ்சை நிலத்திற்குத் தீர்வை | ரூ.5/– |
| 2 | நஞ்சை நிலத்திற்குத் தீர்வை | ரூ.12/– |
| 3 | ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வருபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆக்ரமணத் தீர்வை | ரூ.12/– |
| 4 | பட்டா ஒன்றுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை | ரூ.1/– |

வருவாய்த் தீர்வாய நிகழ்வின் மூலம் அனைத்து வருவாய் கணக்குகளும் முடிக்கப்படுகின்றன. நில வருவாய் ஒவ்வொரு பசலி வருடமும், ஜுலை 1–ஆம் தேதி முதல் ஜுன் 30 வரை வசூலிக்கப்படுகிறது. 1423 பசலி வருடத்தில் (2013–2014),

நிலுவை நிலவரியினையும் சேர்த்து மொத்த நிலவரி ரூ.17.54 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. 1424 பசலி வருடத்திற்கான (2014–2015) உத்தேச நிலவரி கேட்பு ரூ.7.91 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

## 2.7 அம்மா திட்டம்

"அம்மா திட்டம்" (அனைத்து கிராமத்திலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்குதல்) **(Assured Maximum Service to Marginal People in All Villages)** என்ற புதுமையான திட்டமானது 24.02.2013 முதல் வருவாய்த்துறையின் மூலம் துவக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது. தொலைதூர கிராமங்களில் வசிக்கும் மக்களும் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் மக்களும் பயனடையும் வகையில் அம்மா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அம்மா திட்டத்தின்படி ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள வருவாய் கிராமங்கள் அட்டவணையிடப்பட்டு, அக்கிராமங்களில் பிரதி வாரம் வெள்ளிக்கிழமை தோறும், வட்டாட்சியர் தலைமையிலான குழுவினர் முகாமிட்டு, அரசின் பல்வேறு நலத்திட்டங்களை பெறுவது குறித்த வழிகாட்டுதல்களை அளிப்பதோடு மட்டுமல்லாது, அதன்

பயன்கள் மக்களுக்கு அவர்களின் இருப்பிடத்திலேயே வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் முதன்மை நோக்கமானது மக்களைத் தேடிச் சென்று அவர்களது குறைகளை அவ்விடத்திலேயே நிவர்த்தி செய்வதாகும். இத்திட்டத்தின் சிறப்பம்சம், முகாம் நடைபெறும் நாளில் பெறப்படும் மனுக்களில் தகுதியான மனுக்களின் மீது உரிய ஆணை அன்றே பிறப்பிக்கப்படுகிறது.

அம்மா திட்டத்தின் முதல் கட்டத்தில், மாநிலத்திலுள்ள அனைத்து வருவாய் கிராமங்களில் நடைபெற்ற **12,666** முகாம்களில் **33,13,792** மனுக்கள் பெறப்பட்டு அவை நிலுவையின்றி முடிவு செய்யப்பட்டுள்ளன. அதே போன்று அம்மா திட்டத்தின் இரண்டாம் கட்ட முகாம் **04.10.13** முதல் நடத்தப்பட்டு, அம்முகாம்களில் பெறப்பட்ட **12,55,679** மனுக்களில் **31.07.15** அன்று வரை **11,96,550** மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் **16** மாவட்டங்களில் இரண்டாம் கட்ட அம்மா திட்ட முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டு தற்போது மூன்றாவது கட்ட முகாம்கள் நடைபெற்று வருகின்றன. **31.07.2015** அன்று வரை மூன்றாம் கட்ட முகாமில் பெறப்பட்ட **2,23,856** மனுக்களில் **2,15,496** மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. இதுவரை நடத்தப்பட்ட அம்மா திட்ட

முகாம்களில் 47,25,838 மனுக்கள் பெறப்பட்டு அவை குறைந்த கால கட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளன. அம்மா திட்ட முகாம் நடத்துவதற்கு முகாம் ஒன்றிற்கு ரூ.5,000/– வீதம் இதுவரை, ரூ.14.48 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் எதிர்காலத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, இதற்கான முகாம்கள் குறிப்பிட்ட காலங்களில் நடத்தப்படும். இப்புதுமைத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக வருவாய் நிர்வாகம்/ பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மிகச்சிறந்த ஆளுமைக்கான விருது (Best Practices Award for improvement of Quality Delivery System Ensuring Good Governance) ஆகஸ்ட்–15, 2013 அன்று வழங்கப்பட்டது.

### 2.7.1 மக்கள் குறை தீர்க்கும் திட்டம்

ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மாவட்ட ஆட்சியர்கள்/ வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தங்களது தலைமையிடத்திலேயே இருந்து பொது மக்களிடம் மனுக்களைப் பெற்று அவர்களது குறைகளைத் தீர்த்து வருகின்றனர். மக்கள் குறைதீர்க்கும் திட்டத்தின் பயன்களை முழுமையாக கண்காணிப்பதற்கு ஒரே சீராக பயன்படுத்தும் வகையிலான

பொதுவான மென்பொருள் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மென்பொருள் மூலமாக மனுக்களின் நிலையினை இணையதளத்தின் வழியாக அறியலாம்.

**2.7.2 மக்கள் தொடர்பு முகாம்**

மக்கள் தொடர்பு முகாம் திட்டமானது மாவட்டத்தின் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில், மாதத்தின் இரண்டாம் புதன்கிழமை அன்று நடத்தப்படுகிறது. இத்திட்டம் மிகவும் தொலைவில் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நாளில் மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான குழு அக்கிராமத்திற்கு சென்று குறைகளை நேரில் கேட்டறிந்து, கிராம பொதுமக்களின் குறைகளுக்கு தீர்வு காண்கின்றனர்.

மக்கள் தொடர்பு முகாம்களை மேலும் பயனுள்ளதாகச் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.244, வருவாய் [வநி.3(2)] துறை, நாள்.08.08.2011–இன் படி 1) தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) 2) வருவாய் கோட்டாட்சியர் 3) மாவட்ட ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் 4) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஆகிய அலுவலர்கள்

அடங்கிய குழு ஒன்று முகாம் நடைபெற இருக்கும் கிராமத்திற்கு முந்தைய மாதத்தின் மூன்றாவது புதன் கிழமையன்று மனுக்களைப் பெறுவதற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வாறு பெறப்படும் மனுக்கள் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைத்து மனுதாரர்களுக்கு அம்முகாம் நடைபெறும் நாளன்று முடிவான பதில் வழங்கப்படுகிறது.

## 2.8 மின் ஆளுமை திட்டம்

வருவாய்த்துறையில் பொதுமக்களுக்கு அளிக்கும் சேவையை மேம்படுத்தும் வகையில் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் மின் ஆளுமை திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி பொது சேவை மையங்கள் மூலமாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் சாதிச்சான்றிதழ்கள், இருப்பிடச்சான்றிதழ்கள், வருமான சான்றிதழ்கள், முதல்தலைமுறை பட்டதாரி சான்றிதழ்கள், ஆதரவற்ற விதவைச் சான்றிதழ்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண் என்பதற்கான சான்றிதழ்கள் கோரிய மனுக்கள், மின் ஆளுமை திட்டத்தின் மூலம் வருவாய்த்துறை அலுவலர்களால் விரைந்து பரிசீலிக்கப்பட்டு டிஜிட்டல் முறையில்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் **31.07.2015** அன்று வரை மொத்தம் **10,034** பொது சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. **01.01.2015** முதல் **31.07.2015** வரை **39** இலட்சம் சான்றிதழ்கள் மின் ஆளுமை திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், சமூக நல உதவித் தொகை திட்டங்கள் இணையதள உதவியுடன் நிர்வகிக்கப்படுவதால், உதவித்தொகை குறித்த காலத்தில் தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்குவதை உறுதி செய்ய முடிகிறது.

வருவாய் நிர்வாக ஆணையரகம், மாவட்ட ஆட்சியரகங்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களில், செயல்திறனை மேம்படுத்தும் வகையில் அலுவலக நிர்வாக பணிகளில் கடிதங்கள் பெறப்படுதல், கோப்புகளில் நடவடிக்கை நிலையினை கண்டறிதல், ஆய்வு செய்தல் ஆகியவை கணினிமயமாக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது.

## 2.9. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

தமிழ்நாடு அரசு, சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரைக் காப்பாற்ற சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் ஆதரவற்ற மற்றும் ஏழை முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயது மற்றும் அதற்குமேல் வயதுடைய திருமணமாகாத பெண்கள் ஆகியோர் பயன்பெறுகின்றனர். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையை 2011 மே மாதம் முதல் ரூ.500 லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**மத்திய அரசு கீழ்காணும் ஓய்வூதிய திட்டங்களில் பகுதியாக நிதி வழங்குகிறது**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் | மத்திய அரசின் பங்களிப்பு |
|---|---|---|---|
| 1 | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 60 முதல் 79 வயது வரை | ரூ.200 |
| | | 80 வயது மற்றும் அதற்கு மேல் | ரூ.500 |
| 2 | இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 18 முதல் 79 வயது வரை | ரூ.300 |
| 3 | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 40 முதல் 79 வயது வரை | ரூ.300 |

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ், 2010–11 ஆம் வருடத்தில் 23.71 இலட்சம் பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.1,207 கோடி மட்டுமே பட்டுவாடா செய்யப்பட்டது. 2015–16 ஆம் ஆண்டிற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.4,198.05 கோடி ஆகும்.

பயனாளிகளின் எண்ணிக்கை 36.56 இலட்சம் வரை எட்டியது. மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி பயனாளிகளின் வருடாந்திர சரிபார்ப்பு ஆகஸ்ட் 2014–இல் மேற்கொள்ளப்பட்ட போது பயனாளிகளின் இறப்பு, இரட்டைப் பதிவு, முகவரியில் குடியில்லாதது மற்றும் தகுதிக்கான வரையறைகள் பூர்த்தி செய்யாமை ஆகியவைகளை கண்டறிய வேண்டிய காரணங்களால் தீவிரமாக ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளின் எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டு வருகிறது. மேலும், தகுதி உள்ளவர்களுக்கு தொடர்ந்து வழங்கி வருவது போல, தகுதியில்லாதவர்களை கண்டறிந்து தொடர் நடவடிக்கை மேற்கொள்வதும் அரசின் கடமையாகும். பயனாளிகளின் நலனை கருத்திற் கொண்டு, அனைத்து ஏழைகளும் பயனடையும் வகையில், 1962–ம் ஆண்டு அரசாணையின் படியான ஆதரவற்றோருக்கான வரையறை ஏப்ரல் 2015 அரசு ஆணையின்படி, வயது வந்த மகன், மகள்

இருந்தாலும் அவர்களும் வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்கும்பட்சத்தில் பயன் பெறும் வகையில் விதி தளர்த்தப்பட்டது. மேலும், ஒய்வூதியம் பெறவதற்கான தகுதிகள் தளர்த்தப்பட்டன. அவர்களின் அசையா சொத்தானது ரூ.5,000/–ற்கு மிகாமல் இருத்தல் வேண்டும் என்கிற விதியும், தற்பொழுது ரூ.50,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி அனைத்து தகுதியுள்ளவர்களை சீராய்வு செய்து சேர்க்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

ஆண்டுக்கு இருமுறை, பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது சமூகப் பாதுகாப்பு ஒய்வூதியத் திட்டங்களின் கீழ் ஒய்வூதியம் பெறும் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின் கீழ் உள்ள பயனாளிகள், கீழே குறிப்பிட்ட விதிமுறைகளின்படி இலவசமாக அரிசி பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை 4 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.

ஆ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒரு முறை 2 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.

## 2.10 விபத்து நிவாரணத் திட்டம் மற்றும் நலிந்தோர் நிவாரணத் திட்டம்

விபத்து நிவாரணத் திட்டம் மற்றும் நலிந்தோர் நிவாரணத் திட்டம் ஆகிய இரு திட்டங்களின் கீழ் முறையே ரூ.15,000/ ரூ.10,000 என வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களில் பிரதான வருவாய் ஈட்டும் நபர் இறப்பின் அக்குடும்பங்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது. 2014–15–ஆம் ஆண்டில் ரூ.13.32 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

## 2.11 மகளிருக்கு விலையில்லா மின்விசிறி/ மின்அடுப்பு, மிக்ஸி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம்

தற்போதைய அரசால் மகளிருக்கு மின்விசிறி/ மின் அடுப்பு, மிக்ஸி மற்றும் கிரைண்டர் ஆகிய மூன்று பொருட்கள் அடங்கிய சிப்பம் (Package) வழங்கும் திட்டம் 1.85 கோடி அரிசி பெறும் தகுதியுடைய குடும்ப அட்டை வைத்துள்ள 30.06.2011 வரையிலான அனைத்து குடும்பத்திற்கும் கட்டவாரியாக இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர். இத்திட்டத்தின் கீழ் மலைப்பிரதேசங்களில் தட்பவெட்ப நிலை காரணமாக நீலகிரி மாவட்டத்திற்கும் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில், கொடைக்கானல் பகுதிக்கும் மின்விசிறிக்கு

பதில் மின்சார அடுப்பு வழங்க அரசால் முடிவு செய்யப்பட்டு அவ்வாறே இப்பகுதிகளில் மின்சார அடுப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் கடந்த **2011–**ஆம் ஆண்டு செப்டம்பர் **15–**ஆம் நாளன்று திருவள்ளூர் மாவட்டம் காக்களூர் கிராமத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் வருவாய் கிராம பகுதிகளுக்கு முதலாவதாகவும், பின்னர் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களுக்கு, மக்கள் தொகையின் அடிப்படையில் ஏறுவரிசையில் வழங்கப்படுகிறது.

**2011** முதல் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் பயன் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கையின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மொத்த இலக்கு: **1.85** கோடி.

| **ஆண்டு** | **இலக்கு (பயனாளிகள் எண்ணிக்கை)** | **சாதனை ( பயனாளிகள் எண்ணிக்கை)** |
|---|---|---|
| **2011 –12** | 25,00,000 | **25,00,000** |
| **2012 – 13** | 35,00,000 | **35,00,000** |
| **2013 – 14** (மூன்றாம் கட்டம்) | 35,00,000 | 35,00,000 |
| **2014–15** மற்றும் **2015 – 16** (நான்கு மற்றும் ஐந்தாம் கட்டம்) | 90,00,000 | 31,02,357 |
| **மொத்தம்** | **1,85,00,000** | **1,26,02,357 (31.07.2015 வரை)** |

ஆக மொத்தம் இத்திட்டத்தின் கீழ் **31.07.2015** வரை 1,26,02,357 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். மீதமுள்ள அனைவருக்கும் நடப்பு நிதியாண்டில் விலையில்லா மின்விசிறி/ மின் அடுப்பு, மிக்ஸி மற்றும் கிரைண்டர் வழங்கப்படும்.

### 2.11.1 2015–ஆம் ஆண்டு பொங்கல் திருநாளுக்கான விலையில்லா வேட்டி/ சேலை வழங்கும் திட்டம்

**2015**–ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு, அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களின் கண்காணிப்பில் **1.67** கோடி விலையில்லா சேலைகளும் மற்றும் **1.66** கோடி விலையில்லா வேட்டிகளும் பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இதற்கான இந்த ஆண்டு செலவீட்டுத் தொகை ரூ.**486.36** கோடி ஆகும்.

### 2.12 பள்ளிகள் மூலமாக மாணவர்களுக்கு வழங்கப்படும் வகுப்புச் சான்றுகள்

மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெறுவதற்கும், உயர் கல்வியில் சேருவதற்கும் அத்தியாவசியமாக தேவைப்படுகின்ற சாதிச்சான்றிதழ்கள், இருப்பிடச் சான்றிதழ்கள் மற்றும் வருமான சான்றிதழ்கள் பள்ளிகள் மூலம் வழங்கப்படுகின்றன.

மேற்படி சான்றிதழ்களை பெறுவதில் உள்ள காலதாமதம் மற்றும் இடர்பாடுகளை நீக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் **08.05.2012** அன்று சட்டப்பேரவையில் விதி **110**—ன் கீழ் தமிழ்நாடு முழுவதும் **6**—ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் பயிலும் பள்ளியிலேயே சாதி, வருமானம், இருப்பிடச் சான்றிதழ்கள் அக்கல்வியாண்டிலேயே வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி, அரசாணை (நிலை) எண். **184**, வருவாய்[வ.நி.**3(2)**]துறை, நாள் **05.06.2012**—இன்படி சான்றிதழ்கள் வழங்க ஆணையிடப்பட்டது. கடந்த மூன்றாண்டுகளில் **6**—ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு **19,71,461** சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் **10**—ஆம் வகுப்பு மற்றும் **12**—ஆம் வகுப்பு மாணவர்களுக்கு முறையே **12,65,061** மற்றும் **3,50,610** சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.13 தேசிய மக்கள்தொகை பதிவேடு – உயிர் புள்ளியியல் பதிவு செய்தல்

உயிர்புள்ளியியல் பதிவு செய்யும் பணியில், (5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட) ஒவ்வொரு தனி நபரின் புகைப்படம், கைரேகைப் பதிவுகள் மற்றும் விழித்திரை படல அமைப்பு (உயிர் புள்ளியியல்) ஆகியவை பல்வேறு கட்டங்களாக பதிவு செய்யப்படுகிறது. இப்பணி, இந்திய பதிவாளர் ஜெனரல் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் (Registrar

General and Census Commissioner of India) அவர்களின் வழிகாட்டுதலின்படி வருவாய் நிர்வாகத்துறையின் பெரும் பங்களிப்புடன் பாரத மின்னணுக் கழகத்தால் செயல்படுத்தப்படுகிறது.

**2011–**ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான **7.21** கோடியில், குறியீடு செய்யப்பட்ட மக்கள் தொகை **(5** வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்**)** **6,74,18,169** ஆகும். இதில் **31.07.2015** அன்று வரை, **5,62,83,959** நபர்களுக்கு உயிர்ப்புள்ளியியல் பதிவுப்பணி மேற்கொள்ளப்பட்டு, **5,26,47,075** நபர்களுக்கு ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. சதவீத அடிப்படையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட மக்கள் தொகையில் **83.48□** தேசிய மக்கள் தொகை – உயிர்ப்புள்ளியியல் பதிவுப்பணி முடிக்கப்பட்டுள்ளது.

**தேசிய மக்கள் தொகை பதிவேடு – உயிர்ப்புள்ளியல் கணக்கெடுப்பு – (NPR-BME) மற்றும் ஆதார் அட்டை வழங்குதல் – 31.07.15 வரை** முன்னேற்ற விவரப்பட்டியல்

| வ.எண் | மாவட்டம் | உயிர்ப்புள்ளியியல் கணக்கெடுப்பு எடுக்கவேண்டிய மொத்த நபர்கள் | 31.07.15 வரை கணக்கெடுக்கப்பட்ட நபர்களின் சதவிகிதம் | 31.07.15 வரை விநியோகிக்கப்பட்ட மொத்த ஆதார் அட்டைகள் |
|---|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் | 533131 | **99.02** | 436253 |
| 2 | நாகப்பட்டினம் | 1373705 | **94.04** | 1257675 |
| 3 | இராமநாதபுரம் | 1078248 | **92.86** | 900150 |
| 4 | திருநெல்வேலி | 2887327 | **92.79** | 2466722 |
| 5 | புதுக்கோட்டை | 1507275 | **91.16** | 1236885 |
| 6 | தூத்துக்குடி | 1576298 | **90.85** | 1297802 |
| 7 | நீலகிரி | 713857 | **90.06** | 558910 |
| 8 | ஈரோடு | 2161720 | **89.02** | 1773389 |
| 9 | அரியலூர் | 729430 | **88.74** | 609136 |
| 10 | கன்னியாகுமரி | 1712615 | **87.77** | 1491952 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 2582854 | **87.73** | 2191813 |
| 12 | தேனி | 1207061 | **87.31** | 961678 |
| 13 | தருமபுரி | 1458976 | **87.25** | 1182531 |
| 14 | கரூர் | 1026389 | **86.24** | 831114 |
| 15 | வேலூர் | 3711684 | **85.49** | 3024886 |
| 16 | விருதுநகர் | 1866827 | **85.05** | 1548760 |
| 17 | தஞ்சாவூர் | 2244009 | **84.26** | 1770728 |
| 18 | சேலம் | 3332520 | **83.29** | 2654803 |
| 19 | திண்டுக்கல் | 2065648 | **83.25** | 1622511 |
| 20 | திருவாரூர் | 1195490 | **82.81** | 955208 |
| 21 | கடலூர் | 2414419 | **82.73** | 1877556 |
| 22 | விழுப்புரம் | 3266924 | **81.59** | 2487831 |
| 23 | மதுரை | 2903646 | **81.56** | 2390114 |
| 24 | கிருஷ்ணகிரி | 1796504 | **80.90** | 1312325 |
| 25 | காஞ்சிபுரம் | 3627157 | **80.39** | 2878835 |
| 26 | கோயம்புத்தூர் | 3259142 | **79.65** | 2452972 |
| 27 | திருவள்ளூர் | 3435796 | **79.26** | 2638315 |
| 28 | திருவண்ணாமலை | 2373117 | **78.24** | 1597336 |
| 29 | நாமக்கல் | 1618420 | **77.52** | 1214972 |
| 30 | சென்னை | 4153882 | **75.95** | 2695225 |
| 31 | சிவகங்கை | 1291305 | **75.43** | 871829 |
| 32 | திருப்பூர் | 2312793 | **72.88** | 1456859 |
| | மொத்தம் | **67418169** | **83.48** | **52647075** |

## 2.14 பேரிடர் மேலாண்மை

இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் விளைவுகளைத் தடுத்திடும் பொருட்டு தணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதிலும், பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிப்பதிலும், பேரிடர்களை எதிர்கொள்ள திறன்மேம்பாடு செய்வதிலும், வருவாய்த் துறை முக்கிய பங்காற்றி வருகிறது. மனிதர்கள் அல்லது இயற்கையால் ஏற்படும் பேரிடர்களான புயல், சுனாமி, வெள்ளம், நிலச்சரிவு போன்றவற்றால் ஏற்படும் உயிரிழப்புகளையும், பொருட் சேதத்தையும் குறைத்திட, அனைத்து நடவடிக்கைகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

### 2.14.1 மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (State Disaster Management Authority)

பேரிடர் மேலாண்மை குறித்து, கொள்கை அளவில் முடிவுகள் எடுக்கவும், நெறிமுறைகளை வகுக்கவும், மாநில அளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ‘மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்’ (State Disaster Management Authority) ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மாநில பேரிடர்

மேலாண்மை ஆணையத்திற்கு உதவும் பொருட்டும், பேரிடர் மேலாண்மை குறித்த நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்கவும் மாநில அளவிலான செயற்குழு (State Executive Committee) ஒன்று தலைமைச் செயலாளர் தலைமையில் செயல்படுகிறது.

**2.14.2 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை**

பேரிடர் மேலாண்மை தொடர்பான செயல்பாடுகளை ஒருங்கிணைத்து கண்காணிக்கவும், நடைமுறைப்படுத்தவும், மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் எடுக்கப்படும் முடிவுகளை செயல்படுத்திடவும் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை என்ற செயல் முகமை 2013–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. துடிப்பான பேரிடர் மேலாண்மை பணியாளரமைப்பின் மூலமாக அனைத்து விதமான பேரிடர்களின் எதிர்மறை பாதிப்புகளை குறைப்பதுடன் உயிர், உடைமைகள் மற்றும் உட்கட்டமைப்புகளின் சேதத்தை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை செயல்படுகிறது. இம்முகமையானது, 1975–ஆம் ஆண்டைய தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டு, இம்முகமைக்கான புரிந்துணர்வு மற்றும் துணை விதிகள் அரசால் ஒப்புதல்

அளிக்கப்பட்டுள்ளது. இம்முகமையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தலைவராகவும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் மற்றும் அரசின் தலைமைச் செயலாளர் ஆகியோரை துணைத் தலைவர்களாகவும், 14 அரசு செயலாளர்களை உறுப்பினர்களாகவும் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்/ மாநில நிவாரண ஆணையரை அமைப்பாளராகவும் கொண்ட **நிர்வாகக் குழு (Governing Council)** நிர்வகிக்கிறது. இது தவிர இம்முகமைக்கென வருவாய் நிர்வாக ஆணையர்/ மாநில நிவாரண ஆணையரை தலைவராகவும் மற்றும் 9 பிற உறுப்பினர்களையும் கொண்ட **செயற்குழு (Executive Council)** ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இயக்குநர் (பேரிடர் மேலாண்மை) அவர்களை இச்சங்கத்தின் உறுப்பினர் செயலாளராகவும், இச்செயற்குழுவிற்கு குழுக்கூட்டுநராகவும் நியமித்துள்ளது.

பேரிடர் மேலாண்மை தொடர்பான பணிகளை மாவட்ட அளவில் செயல்படுத்திட ஏதுவாக மாவட்ட அளவில், ‘மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்’ (District Disaster Management Authority) அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை, மாநில அளவில் பேரிடர் தொடர்பான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### 2.14.3. மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

பேரிடர் மேலாண்மைக்கென மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை முன்னெச்சரிக்கை, தணிப்பு, திறன் மேம்பாடு, நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு என விரிவாக வகைப்படுத்தலாம்.

#### 2.14.3.1 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

மாநில அளவிலான ‘‘அவசரகால செயல்பாட்டு மையம்’’ (State Emergency Operations Centre) மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படுகிறது. இம்மையத்தில் இயற்கை இடர்பாடுகள் தொடர்பாக முன்னெச்சரிக்கைகள் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துறைத் தலைவர்களுக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகிறது. இதற்கென இம்மையத்தில், காணொலிக் காட்சி வசதி, புயல் எச்சரிக்கை கருவி, பொதுமக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக 1070 என்ற கட்டணமில்லா பொது உபயோகத் தொலைபேசி உட்பட அனைத்து வசதிகளும்

ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதே போன்று, மாவட்ட அளவில், மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களிலும் தொலைபேசி, கணினி வசதிகளுடனும், பொதுமக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக 1077 என்ற கட்டணமில்லா பொது உபயோகத் தொலைபேசியும் பயன்பாட்டில் உள்ளது. மேலும், பேரிடர் காலங்களில், தொலைத் தொடர்புகளை துரிதப்படுத்தும் நோக்கமாக, அனைத்து மாவட்டங்களுக்கும் அதிக அதிர்வெண் கொண்ட ரேடியோ அலைகள் மூலமான தொலைத் தொடர்பு (VHF) சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 397 இடங்களில் மழைமானி நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்களில் நாள்தோறும் பதிவாகும் மழையளவு புள்ளி விபரங்கள் சேகரிக்கப்படுகிறது. பேரிடர்களை திறம்பட கையாள பருவ மழை காலத்திற்கு முன்னதாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தான கூட்டம் நடத்தப்படுகிறது. மேலும், துறை அலுவலர்களும், பொதுமக்களும் பேரிடர்களை எதிர்கொள்ள ஏதுவாக ஒத்திகைப் பயிற்சிகளும் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

### 2.14.4 துயர் தணிப்பு

பேரிடர்கள் நிகழ்வதற்கு முன்னர் சமுதாயத்திலும் அதன் சுற்றுச்சூழலிலும் பேரிடரின் தாக்கத்தை குறைக்கும் நோக்கத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் துயர் தணிப்பு எனப்படும். அவ்வாறான தமிழ்நாடு அரசின் முயற்சிகளில் கடலோரப் பேரிடர் அபாய குறைப்பு திட்டமும் ஒன்றாகும்.

## 2.15 கடலோர பேரிடர் அபாய குறைப்புத் திட்டம்

- ❖ தமிழக கடலோரத்தில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பு தேவைகளை கருத்தில் கொண்டு, பேரிடர்களின் அபாயத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் விதமாக உலக வங்கி நிதியுதவியுடன் **1,481.80** கோடி ரூபாய் மதிப்பிலான 'கடலோர பேரிடர் அபாய குறைப்புத் திட்டம்' செயல்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த **15.05.2013** அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். **5** ஆண்டுகளில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த திட்டத்திற்காக அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தமிழகத்தின் **13** கடலோர

மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖இத்திட்டமானது நான்கு முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ.எண் | பிரிவுகள் | நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | பேரிடர் அபாயம் குறைப்பு நடவடிக்கைகள் | 1035.00 |
| 2 | மீன்வளத்துறை பணிகள் | 321.30 |
| 3 | பேரிடர் எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடு பணிகள் | 52.50 |
| 4 | திட்ட செயல்பாட்டிற்கான நிதியுதவிகள் | 73.00 |
| | மொத்தம் | ரூ. 1481.80 |

## 2.15.1 பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகள்

இத்தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகள் குறித்து கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

### அ. பாதுகாப்பான வீடுகள் கட்டுதல் மற்றும் பாதுகாப்பான சாலைகள் அமைத்தல் (ரூ. 310 கோடி)

கடற்கரை கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு பல்வேறு விதமான பேரிடர் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பு வழங்கும் வகையில் பேரிடரை தாங்கக்கூடிய **14,346** வீடுகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலமாக கட்டி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில் கடற்கரை கிராமங்களில் வசிக்கும் மக்கள் பல்நோக்கு பாதுகாப்பு மையத்திற்கு எளிதில் சென்றடைய உதவும் வகையில் **143** இடங்களில் அறிவிப்பு பலகைகளுடன் கூடிய முறையான இணைப்பு சாலைகள் அமைத்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**ஆ. பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டுதல் (ரூ. 315 கோடி)**

கடலோரத்தில் பாதுகாப்பற்ற வசிப்பிடங்களில் வாழ்ந்துவரும் மக்களை புயல் மற்றும் இதர வகை பேரிடர் காலங்களில் பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பதன் மூலம் உயிரிழப்புகளை தவிர்க்க இயலும் என்ற உயர்ந்த நோக்கில் கடலோர மாவட்டங்களில் **121** இடங்களில் தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டு பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் ரூ. **315** கோடியில் கட்டப்பட்டு வருகின்றன. அதில் இதுவரை **35** கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதர கட்டடங்கள் கட்டும் பணி நடைபெறுகிறது.

**இ. முன்னெச்சரிக்கை கருவிகள் அமைத்தல் (ரூ.50 கோடி)**

எல்காட் நிறுவனம் திட்ட மேலாளராக செயல்பட்டு வரும் இத்திட்டத்தில் பேரிடர்கள் வருவதற்கான சூழல்களை முன்கூட்டியே அறிந்து பொதுமக்களுக்கு விரைவாக

தகவல்கள் வழங்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை கருவி (EWS) அல்லது பேரிடர் குறித்த அறிவிப்பு கருவி (DWAS) ஒன்றினை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கடற்கரையில் வாழும் சமூகத்தினருக்கு முன்னெச்சரிக்கை விவரங்களையும் பேரிடர் குறித்த செய்திகளையும் தேவைகேற்ப, 24x7 முறையில் எப்பொழுதும் தெரிவிப்பதற்கு வசதி ஏற்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் 13 கடற்கரை மாவட்டங்களில் உள்ள 444 குடியிருப்புகளில் பேரிடர் அபாய முன்னறிவிப்பு கருவிகள் அமைக்கப்பட உள்ளன.

இதற்கான முன்னோடித்திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சோதனை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்து இடங்களிலும் நிறுவப்படும்.

**ஈ. நாகப்பட்டினம், கடலூர் மற்றும் வேளாங்கன்னி நகரங்களில் தரைக்கு மேல் உள்ள மின் இணைப்புகளை பூமிக்கு அடியில் நிறுவுதல் (ரூ.360 கோடி)**

**2011–**ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட தானே புயல் காரணமாக கடலூர், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மிக அதிகமான உள்கட்டமைப்புகள் பாதிப்புக்குள்ளாயின.

எதிர்காலத்தில் இவ்வாறான பாதிப்புகளை தவிர்க்கும் விதமாக நாகப்பட்டினம், வேளாங்கன்னி மற்றும் கடலூர் நகராட்சிகளில் ஒரு முன்னோடி முயற்சியாக பூமிக்கு மேலுள்ள மின் வழித்தடங்களை பூமிக்கு கீழான வழித்தடமாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியானது **360** கோடி செலவில் செயல்படுத்தப்படும். இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### 2.15.2 மீன்வளத்துறை பணிகள் (321.30 கோடி)

இப்பிரிவின் கீழ் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை என்று இரண்டு வகையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அ. மீன்வளத் துறையில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் குறிக்கோள் மீன்வளத்துறையின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் ஆகும். இதில் கீழ்கண்ட ஏழு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

| வ. எண் | பணியின் வகைகள் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | நாகை மாவட்டத்தில் மீன்பிடி துறைமுகங்களை மறுசீரமைப்பு மற்றும் புதுமைப்படுத்துதல்<br>நாகை துறைமுகம்<br>பழையார் துறைமுகம் | <br><br>45.21<br>32.22 |
| 2 | ஆற்றுமுகத்துவாரத்தை நிரந்தரமாக திறந்துவைத்தல்<br>உப்பனாறு முகத்துவாரம்<br>வெள்ளாறு முகத்துவாரம் | <br><br>8.03<br>14.45 |
| 3 | புதிய மீன் இறங்குதளம் அமைத்தல்<br>1) நாகை மாவட்டம் நாகூர்கிராமம்,<br>2) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை அன்னன்கோயில் | <br>12.99<br>18.09 |
| 4 | குழாய் பனிக்கட்டி இயந்திர நிலையம் சின்னமுட்டத்தில் கட்டுதல் (TUBE ICEPLANT) | 0.50 |
| 5 | மல்லிப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தை நவீனப்படுத்துதல் | 60.00 |
| 6 | தூத்துக்குடி மாவட்டத்தில் புன்னக்காயல் முகத்துவாரத்தை உறுதிப்படுத்துதல் | 18.00 |
| 7 | புதிய மீன்பிடி துறைமுகங்கள் குறித்து ஆய்வு செய்தல் | 10.00 |

மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மேலே வரிசை எண்.1 முதல் 4 வரை உள்ள பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. வரிசை எண் 5 முதல் 7 வரை உள்ள பணிகளுக்கு திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்றுவருகிறது.

## ஆ. நிலையான வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை (FIMSUL II)

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காக நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கடல் மீன்வளத்தை முழுமையான அளவில் பயன்படுத்தும் வகையில் கூட்டு மேலாண்மைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பல்வேறு வாழ்வாதார தொழில்களில் மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், சிறப்பான மேலாண்மை அணுகுமுறையுடன் வாழ்வாதாரத்திற்கான நிதி உதவியும் மீனவர்களுக்கு கம்பியில்லா தொலை தொடர்பு வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படவுள்ளது.

## 2.15.2.1 பேரிடர் எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் (ரூ.52.50 கோடி)

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமையின் நிறுவன அமைப்பினை உறுதிபடுத்துவதற்காக மாநில பேரிடர் மேலாண்மை பயிற்சி மையம் ஒன்று ரூ. 10 கோடி செலவில் உருவாக்கப்பட உள்ளது. பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புணர்வை பள்ளி மாணவர்களிடையே

உருவாக்குவதற்காக, பாடத்திட்டத்திலும் துறை அலுவலர்களுக்கான பயிற்சி பாடத்திட்டத்திலும் பேரிடர் மேலாண்மை குறித்த பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பேரிடர் அபாயத்திற்குள்ளாகும் சமூகத்தினர் தங்களுக்குள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும், ஆங்காங்கே உள்ள உள்ளாட்சி அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் பேரிடர் அபாய குறைப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்புகளை சிறப்பாக பயன்படுத்தி கொள்வதற்கு தயார்படுத்தும் விதமாகவும், சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தினால் (SIRD) ரூ.15 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

இயற்கை வளங்களை பாதுகாக்கவும் மற்றும் பயனுள்ள வகையில் பயன்படுத்தவும், ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் குறித்த மேலாண்மை திட்டம் தயாரித்தல், பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகள் குறித்த வரைபடம் தயாரித்தல் மற்றும் தமிழ்நாடு கடற்கரை பகுதி மக்களுக்கு பயிற்சி திட்டம்

தயாரித்தல் போன்ற பணிகள் சுற்றுச்சூழல் துறையினரால் ரூ. 7.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 2.15.3 திட்ட செயல்பாட்டிற்கான நிதியுதவிகள்

இப்பிரிவின் கீழ் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான நிதியுதவி வழங்கப்படுகிறது. திட்ட செயலாக்க முகமைகள் மற்றும் திட்ட மேலாண்மை மையங்களுக்கான நிர்வாக செலவுகள் இதன்கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டமானது நிறைவுபெறும்போது அனைத்து விதமான பேரிடர் அபாயங்களிலிருந்தும் மாநிலத்தை பாதுகாப்பதாக அமைவதுடன் பேரிடர்களை எதிர்கொள்வதற்கான வலிமையை சமுதாயத்திற்கு வழங்குவதாகவும் அமையும்.

### 2.15.4 பேரிடர்களை எதிர்கொள்வதற்கான திறன் மேம்பாடு

பேரிடர் மேலாண்மைப் பயிற்சிக்கான பயிற்சி திட்டம் தயாரித்தல், பேரிடர் மேலாண்மையின் பல்வேறு பங்குதாரர்களுக்கும் மருத்துவமனை அவசரகால பேரிடர் மேலாண்மைப் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் அளித்தல், பேரிடர்கள் குறித்த பிரசுரங்கள் தயாரித்தல், பொதுவான செயல்முறை அறிக்கையினை தயார் செய்தல்,

மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டங்களை மேம்படுத்துதல், வட்ட அளவிலான பேரிடர் மேலாண்மை திட்டங்களை தயாரித்தல், மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான அவசரக் கட்டுப்பாட்டு மையங்களை மேம்படுத்துதல், திருவள்ளூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் அபாய மதிப்பாய்வு குறித்தான ஆய்வறிக்கைகள் (H.V.R.A-Study) தயார் செய்தல், போன்ற திறன் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திறன் மேம்பாட்டிற்காக, 13–வது நிதிக்குழுவின் ஒதுக்கீட்டின்படி, 2010–11, 2011–12 மற்றும் 2012–2013 நிதியாண்டிற்கு ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, வருவாய்த்துறை அலுவலர்களான துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் ஆகியோரது திறன் மேம்பாட்டிற்காக அரசு ரூ.2.5 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் குடிமைப்பணிகள் பயிற்சி நிலையம் ஆகியவை முதன்மை பயிற்சி நிலையங்களாக ஈடுபடுத்தப்பட்டு, இதுவரை, 8447 வருவாய்த்துறை அலுவலர்களுக்கு ரூ.2.16 கோடி செலவில் பேரிடர் மேலாண்மை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 2.16 நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள்

### 2.16.1 மனித உயிரிழப்பு மற்றும் உடமைகளுக்கு ஏற்படும் சேதத்திற்கான நிவாரணம்

இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மனித உயிரிழப்பு, கால்நடை இழப்பு மற்றும் குடிசை சேதம் ஆகியவற்றிற்கு நிவாரணம் வழங்க தமிழ்நாடு அரசு நெறிமுறைகளை வகுத்துள்ளது. மனித உயிரிழப்பிற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணமாக வழங்கப்படும் ரூ.1.50 இலட்சம் தவிர, கூடுதலாக ரூ1.00 இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும் வழங்கப்படுகிறது. மேலும், கால்நடை இழப்புகளுக்கு, பசு/ எருமை மாடு ஒன்றுக்கு தலா ரூ.20,000/–மும், ஆடு ஒன்றுக்கு தலா ரூ.2,000/–மும் என்கிற அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படுகிறது. முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ.5,000/–மும், பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ.2,500/– என்ற அளவில், சேதமடைந்த குடிசை வீடுகளின் உரிமைதாரர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. இவ்வகையில் கடந்த ஆண்டு ரூ.4.86 கோடி அளவிற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

## 2.16.2 உட்கட்டமைப்புகளை சீர் செய்தல்

**2014–**ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழையின் காரணமாக சேதமடைந்த உட்கட்டமைப்புகளை சீரமைக்க மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.**60** கோடி பின்வரும் துறைகளுக்கு, அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

| ஒதுக்கப்பட்ட துறைகள் | ஒதுக்கீடு தொகை (ரூ. கோடிகளில்) |
|---|---|
| நெடுஞ்சாலைத் துறை | 30.00 |
| பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரம்) | 10.00 |
| நகராட்சி நிர்வாகம் | 4.00 |
| ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை | 10.00 |
| பேரூராட்சிகள் | 0.60 |
| சென்னை மாநகராட்சி | 4.15 |
| சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் | 1.00 |
| தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் | 0.25 |
| **மொத்தம்** | **60.00** |

## 2.16.3. குடிநீர் வழங்கல்

**2014–2015–**ஆம் ஆண்டில் குறைந்த மழைப் பொழிவு பெற்ற மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்கும் வகையில் ரூ.**95.50** கோடி பின்வரும் மாவட்டங்களுக்கும், துறைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | வேலூர் (ரூ.5 கோடி வேலூர் மாநகராட்சிக்கு மட்டும்) | 20.00 |
| 2 | திருவண்ணமலை | 10.00 |
| 3 | காஞ்சிபுரம் | 5.00 |
| 4 | திருச்சிராப்பள்ளி | 5.00 |
| 5 | விருதுநகர் | 5.00 |
| 6 | மதுரை | 5.00 |
| 7 | பெரம்பலூர் | 3.00 |
| 8 | அரியலூர் | 2.00 |
| 9 | எஞ்சிய 23 மாவட்டங்களுக்குத் தலா ரூ.50 லட்சம் வீதம் | 11.50 |
| | **மொத்தம்** | **66.50** |

| வ.எண். | துறையின் பெயர் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் | 10.00 |
| 2 | நகராட்சி நிர்வாகம் | 10.00 |
| 3 | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் | 5.00 |
| 4 | பேரூராட்சிகள் | 3.00 |
| 5 | கால்நடை பராமரிப்புத்துறை | 1.00 |
| | **மொத்தம்** | 29.00 |
| | **ஒட்டு மொத்த கூடுதல்** | **95.50** |

மேலும், சென்னை மாநகரில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்கும் வண்ணம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்திற்கு ரூ.52.20 கோடி கூடுதலாக வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.16.4 மாநில பேரிடர் நிவாரண நிதி

பேரிடர் நிவாரண நிதியின் கீழ், **2015–2016** முதல் **2019–2020** வரையிலான காலத்திற்கு பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| ஆண்டு | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2015–2016 | 679.00 |
| 2016–2017 | 713.00 |
| 2017–2018 | 748.00 |
| 2018–2019 | 786.00 |
| 2019–2020 | 825.00 |
| மொத்தம் | **3751.00** |

### 2.16.5 மாநிலத்தில் தேடுதல் மற்றும் மீட்புப் பணி

பேரிடர் காலங்களில், மாநிலத்தில், தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில், **21.10.2014** அன்று பெய்த கனமழையினைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக, மஞ்சநாயக்கன்பட்டி உக்கடை காளிப்பட்டி அருகே நல்லதங்காள் ஓடை மற்றும் கராச வாய்க்காலின் இடையே சிக்கிய **10** நபர்கள் கோயம்புத்தூர் மாவட்டம், சூளூர் விமானப்படை தளத்தின் ஹெலிகாப்டர் உதவியுடன் மீட்கப்பட்டனர். மேலும், **28.6.2014** அன்று மவுலிவாக்கத்தில் ஏற்பட்ட கட்டட விபத்தின் போது, போர்க்கால அடிப்படையில்

மேற்கொள்ளப்பட்ட தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் காரணமாக 27 நபர்கள் உயிருடன் மீட்கப்பட்டனர். இந்நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்ட அனைத்துத் துறை அலுவலர்களின் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 08.07.2014 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பாராட்டினார்கள்.

**2.16.6 பிற மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம்**

பேரிடர் காலங்களில் தமிழக அரசு, மற்ற மாநிலங்களுக்கும் நிவாரண உதவிகளை வழங்கி உள்ளது. கடந்த 2014–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்தில் பெய்த பெருமழையின் காரணமாக முன் எப்போதும் இல்லாத அளவில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவினால் ஏற்பட்ட பாதிப்புகளை சீர்செய்திட முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 5.00 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. மேலும், கடந்த 12.10.2014 அன்று ஆந்திர மாநிலக் கடலோர பகுதியில், விசாகப்பட்டினம் அருகே கரையைக் கடந்த ‘‘ஹூட் ஹூட்’’ புயலின் காரணமாக, அம்மாநில மின் கட்டமைப்பு மற்றும் தொலைத் தொடர்பு உள்ளிட்ட உட்கட்டமைப்புகளுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஆந்திர மாநில மக்களின் துயரத்தில்

பங்கு கொள்ளும் விதமாகவும், அவர்களுக்கு உடனடியாக உதவி செய்யும் முகமாகவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 5 கோடி ரூபாய் வழங்கிட உத்தரவிட்டார்கள். மேலும், 100 மின் மாற்றிகள், 5000 மின் கம்பங்கள் மற்றும் 10,000 மின் கடத்திகள் ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேலும், பொறியாளர்கள், சாலை ஆய்வாளர்கள் மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் பணியாளர்கள் அடங்கிய மீட்புக் குழு ஒன்றும் ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

# 3. நில நிர்வாகம்

## 3.1. முன்னுரை

**1803**–ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட முன்னாள் வருவாய் வாரியம், நிலம் சம்பந்தப்பட்ட அனைத்து இனங்களுக்கும் பொறுப்பு வகித்து வந்ததுடன், நில நிர்வாகம் மற்றும் நில வருவாய் ஆகியவற்றைக் கவனித்து வந்த பணியாளரமைப்பையும் நிர்வகித்து வந்தது. இம்முன்னாள் வருவாய் வாரியம், **1980**–இல் கலைக்கப்பட்டு, அந்த வாரியம் நிர்வகித்து வந்த நில நிர்வாகம் மற்றும் நில வருவாய் ஆகியவற்றைக் கவனிப்பதற்காகவும், முன்னாள் வருவாய் வாரியத்திற்குண்டான அதிகார வரம்பின்படி செயல்படுவதற்காகவும், மூன்று தனித் துறைகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு, ஆணையர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

நில நிர்வாகத்துறையானது, முன்பிருந்த வருவாய் வாரியத்திலிருந்து உருவாக்கப்பட்டது. அரசு நிலங்களைப் பொதுப் பயன்பாட்டிற்காக அரசின் பிற துறைகளுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் ஒதுக்கீடு செய்வதில் நில நிர்வாகத்துறை முக்கியப் பங்காற்றி வருகிறது. மேலும், இத்துறை மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்களையும் நிர்வகிப்பது, விவசாய நில ஒப்படை, வீட்டுமனை ஒப்படை, நிலக்குத்தகை, நில

உரிமை மாற்றம், நில மாற்றம் மற்றும் அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்ற முக்கியமான பொருண்மைகளை கையாளுகிறது. மேலும், பொது நோக்கங்களுக்காகத் தேவைப்படும் தனியார் நிலங்களை கையகப்படுத்தும் நில எடுப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிடுகிறது. இதைத் தவிர பட்டா மாற்ற நிகழ்வுகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பது மட்டுமின்றி, நத்தம் நிலவரித் திட்டம் மற்றும் நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள முறையீட்டு அதிகாரங்களையும் செயல்படுத்தி வருகிறது. மேலும், தொழில் நோக்கங்களுக்காக பாசன நீரை பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்தும் பணி மற்றும் சிறு பாசன கணக்கெடுப்பு, ஒருங்கிணைப்பு அலுவலகமாகவும் செயல்பட்டு வருகிறது.

துறைத்தலைவரான நில நிர்வாக ஆணையருக்கு மூன்று இணை ஆணையர்கள் மற்றும் ஐந்து உதவி ஆணையர்கள் துணை புரிகின்றனர். மாவட்ட அளவில் நிலம் தொடர்பான பல்வேறு பணிகள் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் வாயிலாக செயல்படுத்தப்படுகின்றன.

## 3.2 பட்டா மாறுதல்

வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு பட்டா மாறுதல் வேண்டி மனுதாரர்கள் அடிக்கடி செல்வதையும், கால விரயத்தையும் தவிர்க்கும் பொருட்டு நடைமுறையில் உள்ள பட்டா மாற்ற முறை ஒழுங்குபடுத்தப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் **10.06.2011** அன்று அறிவித்தார்கள். மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, கிராம நிர்வாக அலுவலர்கள் பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறுவதற்கு ஏதுவாக, வருவாய் நிலை ஆணை எண்.**31(8)**–இல் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண்.**209**, வருவாய் [(நிஅ**1(1)**] துறை, நாள் **09.07.2011**–இல் ஆணை வெளியிடப்பட்டது. அவ்வரசாணையில், பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் மீது குறித்த கால அளவிற்குள் நடவடிக்கை மேற்கொள்ள கால வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது தவிர, அரசாணை (நிலை) எண்.**210**, வருவாய் [(நிஅ**1(1)**] துறை, நாள் **08.07.2011**–இல் பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறுவது குறித்தும், அவற்றின் மீது நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மேற்கண்ட அரசாணைகளின்படி மனுதாரர்கள் பட்டா மாறுதல் உத்தரவு

பெறும்போது, உட்பிரிவு கட்டணத்தை செலுத்தினால் போதுமானதாகும்.

### 3.2.1 விரைவு பட்டா மாறுதல் திட்டம்

மேற்குறிப்பிட்ட இரு அரசாணைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட விரைவு பட்டா மாறுதல் திட்டத்தின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- பட்டா மாறுதல் கோரும் மனுக்கள் கிராம நிர்வாக அலுவலரால் பெறப்பட்டு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வியாழக்கிழமையும் பட்டா மாறுதல் நாளாக அனுசரிக்கப்பட்டு, மனுக்கள் மீது அந்நாளில் தீர்வு காணப்படுகிறது.

- உட்பிரிவு இல்லாத இனங்களில் **15** நாட்களிலும், உட்பிரிவு உள்ள இனங்களில் **30** நாட்களிலும் பட்டா மாறுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

- இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்த விவரங்கள் இரு வாரங்களுக்கொருமுறை மாவட்டங்களிலிருந்து கணிணி மூலம் பெறப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் **31.3.2015** முடிய **50,92,844** மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டு பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.2.2 சார்–பதிவாளர் அலுவலகம் வாயிலாக பெறப்பட்ட பட்டா மாறுதல் விண்ணப்பங்களை முறைப்படுத்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்

இந்தத் திட்டமானது மாநிலம் முழுவதும் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. **1.7.2014** முதல் **31.3.2015** வரை பட்டா மாறுதல் குறித்து பெறப்பட்ட **12,74,345** மொத்த மனுக்களில் **55** சதவிகித மனுக்கள் சார்–பதிவாளர் அலுவலகங்கள் வாயிலாக (STR Stream) பெறப்பட்டன. ஜுலை **2014** முதல் STR மற்றும் RTR மூலம் பெறப்படும் மனுக்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களும், நடவடிக்கை எடுக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களும், இருவாரங்களுக்கு ஒருமுறை ஆன்–லைன் மூலமாகப் பெறப்பட்டு, காணொலிக் காட்சி மூலம் கூடுதல் தலைமைச் செயலாளர்/ நில நிர்வாக ஆணையர் அவர்களால் ஆய்வு செய்யப்படுகின்றன. பத்திரப் பதிவுத் துறையுடன் ஒருங்கிணைந்து, சார் பதிவாளர் அலுவலகம் மூலமாகப் பெறப்படும் (STR stream) மனுக்களை ஆன்–லைன் வழியாகவும் வலைதள மென்பொருள் மூலமாகவும் பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.3 வீட்டுமனை ஒப்படை

ஏழை மக்கள் வீடின்றி இருக்கக்கூடாது என்பதே தமிழக அரசின் உயரிய நோக்கமாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு, வீட்டுமனை ஒப்படை, வருவாய் நிலை ஆணை எண்.21–இன் கீழ் விதிகளுக்குட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. ஆட்சேபகரமான புறம்போக்குகள் மற்றும் நீர்நிலைப் புறம்போக்குகள் போன்ற இனங்களைத் தவிர்த்து, பிற ஒப்படை செய்யக் கூடிய நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைக்காக ஒப்படை செய்யப்படுகின்றது. கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம் ரூ.30,000–க்கும் குறைவாக உள்ள வீடில்லா ஏழைக் குடும்பங்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்த வரையில், குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. 50,000–க்கும் குறைவாக உள்ள வீடில்லா ஏழை குடும்பங்களுக்கும் இலவச வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர்களின் பெயரில் மட்டுமே வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. தற்போது, நடைமுறையிலுள்ள விதிகளின்படி கிராமங்களில் மூன்று சென்ட், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவில் வீட்டுமனைக்காக நிலம்

வழங்கப்படுகின்றது. பல்வேறு நிலையிலான வருவாய்த்துறை அலுவலர்களுக்கு வீட்டுமனை ஒப்படைக்கென கீழ்க்கண்டவாறு நிதி அதிகார வரம்பு அரசாணை (நிலை) எண். 248, வருவாய்த் துறை நாள் 28.07.2009–ன்படி நிர்ணயிக்கப்பட்டது.

**வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு அலுவலர்களின்**

**நிதி அதிகார உச்சவரம்பு**

| வ.எண் | அலுவலர்கள் | நிதி அதிகார உச்ச வரம்பு ( நில மதிப்பில்) |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர் | ரூ.30,000/– வரை |
| 2 | கோட்டாட்சியர் | ரூ.50,000/– வரை |
| 3 | மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.1,00,000/– வரை |
| 4 | மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ.4,00,000/– வரை |
| 5 | நில நிர்வாக ஆணையர் | ரூ.5,00,000/– வரை |
| 6 | அரசு | ரூ.5,00,000/– க்கும் மேல் |

வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு தமிழக அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதுடன், 2011–2012–ஆம் நிதியாண்டு முதல் 2014–2015–ஆம் நிதியாண்டு வரையில் 7,00,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுமென கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஒவ்வொரு நிதியாண்டிலும், இலக்கினை விஞ்சி, மொத்தம் 8,52,534 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | இலக்கு | வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் |
|---|---|---|
| 2011 –2012 | 1,00,000 | 1,21,804 |
| 2012–2013 | 1,00,000 | 1,31,299 |
| 2013–2014 | 2,00,000 | 2,17,723 |
| 2014–2015 | 3,00,000 | 3,81,708 |
| மொத்தம் | 7,00,000 | 8,52,534 |

**2015–2016**–ஆம் நிதியாண்டில் **3.50** இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதன்படி, **1.4.2015** முதல் **31.7.2015** வரையில், **1,57,882** இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**3.4 நிலமாற்றம்**

வருவாய் நிலை ஆணை எண். **23**–இன்கீழ் அரசு நிலங்கள் தேவைக்கேற்ப மத்திய அரசு துறைகளுக்கு நிலக்கிரயம் வசூலித்துக் கொண்டும், வருவாய் நிலை ஆணை எண். **23**ஏ–இன்கீழ் மாநில அரசு துறைகளுக்கு நிலக்கிரயமின்றியும் நிலமாற்றம் செய்யப்படுகின்றன.

மத்திய மாநில அரசுத் துறைகளுக்கு அரசு நிலங்கள் தேவைப்படின், கேட்புத்துறையானது, சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில், துறையின்தேவை மற்றும் இருப்பிலுள்ள தகுந்த நிலம் ஆகியவற்றை ஆய்வு

செய்து, நிலமதிப்பினை பொறுத்து நிலமாற்ற முன்மொழிவினை அரசுக்கு நில நிர்வாக ஆணையர் வழியாக மாவட்ட ஆட்சியர் அனுப்புவார்.

மாநில அரசுத் துறைகளான, சுகாதாரம், கல்வி மற்றும் காவல் துறைகளுக்கு நீர்நிலைப் புறம்போக்கு, மயானம், பாதை போன்ற ஆட்சேபனைக்குரிய நிலங்கள் நீங்கலாக ஏனைய இதர வகைபாடுடைய நிலங்களில் குறைந்தபட்ச அளவில் நிலமதிப்பு வரம்பின்றி நில மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அரசாணை (நிலை) எண்.503, வருவாய்த்துறை, நாள் 21.9.1999 மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆட்சேபகரமான வகைபாடுடைய நிலங்கள் தொடர்பாக அரசு அளவில் நில நிர்வாக ஆணையரது பரிந்துரையின்பேரில் உரிய ஆணை பிறப்பிக்கப்படும்.

நிலமாற்ற இனங்களில், மேய்க்கால் (அல்லது) மந்தைவெளிப் புறம்போக்கு நிலங்கள் உட்படுகையில், நிலமாற்றம் செய்யப்படும் பரப்புக்கு ஈடான மாற்று நிலம் வருவாய் மற்றும் கால்நடை பராமரிப்பு துறையினரால் கூட்டுப் புலத்தணிக்கை மூலம் கண்டறியப்பட வேண்டும். அந்த மாற்று நிலத்தை மேம்படுத்துவதற்கு மேம்பாட்டுக் கட்டணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.6,000/– அல்லது எக்டேர் ஒன்றுக்கு ரூ.15,000/–

வீதம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புக்கு கேட்புத்துறை செலுத்த வேண்டும். அந்த உள்ளாட்சி அமைப்பானது மேற்படி மாற்று நிலத்தை மேம்படுத்தி கால்நடைகள் மேய்வதற்கு அனுமதிக்க வேண்டும். மேற்படி மாற்று நிலம் கால்நடைகள் மேய்வதற்கு மட்டும் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும். அந்நிலத்தின் உரிமை வருவாய்த்துறையிடம் இருக்கும்.

அரசுத் துறைகளுக்கு நிலமாற்றம் செய்யப்படும் நிலங்கள் எந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டனவோ, அதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அரசு நிலங்களுக்கு வருவாய்த்துறையே பாதுகாவலராக உள்ளபடியால், பயன்படுத்தப்படாத நிலங்களை மீளப் பெற்று, இதர துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் வருவாய்த்துறைக்கு உள்ளது.

**2011**–ஆம் ஆண்டு முதல் **2015**–ஆம் ஆண்டு வரை **3190.32** ஏக்கர் அரசு நிலங்கள், காவல், மருத்துவம், வேலைவாய்ப்பு மற்றும் மீன்வளம் ஆகிய அரசுத் துறைகளுக்கு **387** இனங்களில் நிலமாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

### 3.5 நில உரிமை மாற்றம்

அரசு நிலங்கள் வருவாய் நிலை ஆணை எண். 24–இன் கீழ் பொதுப் பயன்பாட்டிற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள்/ கழகங்கள்/ வாரியங்கள்/ பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கும் சில அரிய நேர்வுகளில் தனியார் நிறுவனங்களுக்கும் அவற்றின் தேவை, அவசியம் போன்றவற்றினை ஆய்வுசெய்து, அரசின்வசம் நிலம் இருக்கும்பட்சத்தில் நிலஉரிமை மாற்றம் செய்யப்படுகிறது. மேற்படி நிலங்கள் வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காக மாற்றம் செய்யப்பட்டால் இதன் சந்தை நிலமதிப்பு ஒரு மடங்கு மட்டுமே வசூல் செய்யப்படும். வணிக நோக்கத்திற்காக உரிமை மாற்றம் செய்யும்போது இருமடங்கு சந்தை நில மதிப்பு வசூல் செய்யப்படும். முழு நில கிரயத்தை வசூலித்துக் கொண்டு நில உரிமை மாற்றம் செய்யப்படும் இனங்கள் தொடர்பாக விதிக்கப்படும் நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்படுமானால் நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்கள் இழப்பீட்டுத் தொகை ஏதுமின்றி மீளப் பெறப்படுகின்றன.

சில சிறப்பு நேர்வுகளில் பொது நலன் கருதி குடிநீர் திட்டப் பணிகள் உள்ளாட்சி அமைப்புகளிலும் மற்றும் சென்னை மாநகரிலும் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம் போன்றவற்றிற்கும் அரசு நிலங்கள் நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. மேலும், பாதாள சாக்கடை திட்டம், கழிவு நீர் சுத்திகரித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் ஆகியவற்றிற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, அரசு நிலங்கள் நிலக்கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றது. அதேபோல் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டுவதற்கும், அரசு நிலங்கள் இலவசமாக நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றது.

**2011**–ஆம் ஆண்டு முதல் **2015**–ஆம் ஆண்டு வரை **2,904.63** ஏக்கர் அரசு நிலங்கள், சிப்காட், சிட்கோ, டிட்கோ மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் போன்ற பல்வேறு மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் வாரியங்களுக்கு **288** இனங்களில் நில உரிமை மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

### 3.5.1 தலைமைச் செயலக அளவிலான குழு

நிலமாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் தொடர்பான முன்மொழிவுகளில் விரைந்து முடிவெடுப்பதற்கு ஏதுவாக,

அரசாணை(நிலை) எண்.426, வருவாய் [நி.மு.4] துறை, நாள் **29.9.2014**–இல், வருவாய்த்துறை செயலரை தலைவராகவும், நில நிர்வாக ஆணையரை ஒருங்கிணைப்பாளர்/ உறுப்பினர்– செயலராகவும், மற்றும் பொதுப்பணித்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் ஆகிய துறைத் தலைவர்களது இசைவு பெரும்பாலான இனங்களில் தேவைப்படுவதால், அத்துறைத் தலைவர்களை உள்ளடக்கி, தலைமைச் செயலக அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு மாதத்திற்கொருமுறை அல்லது தேவையேற்படின் அதற்கு முன்பாகக் கூட்டப்படும்.

இக்கூட்டத்தில், நில மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் தொடர்பாக பிற துறைகள் சார்ந்த நிலங்கள், கேட்புத் துறை/ நிறுவனங்களுக்கு வழங்க சம்பந்தப்பட்ட துறையின் இசைவு/ தடையில்லாச் சான்று பெறுதல் காரணமாக இறுதி முடிவு மேற்கொள்ள ஏதுவாக, மாவட்ட ஆட்சியர்கள் நில மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் தொடர்பாக நில நிர்வாக ஆணையருக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கும்போது, முன்மொழிவு நகல் மற்றும் தேவையான ஆவண நகல்களை சம்பந்தப்பட்ட துறைத் தலைவருக்கு அனுப்பி வைத்து இசைவு/ தடையில்லாச் சான்று கோருதல் வேண்டும். மேற்படியான

இனங்கள் தொடர்பான முன்மொழிவுகள் இக்குழுவின் முன் ஆய்வுக்கு வைக்கப்பட்டு அங்கீகரிப்பது/ நிராகரிப்பது குறித்து முடிவெடுக்கப்படும். இக்குழு இதுவரை ஐந்து முறை கூட்டப்பட்டு, **53** முன் மொழிவுகள் மீது முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

### 3.6. நிலகுத்தகை

அரசுக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டடங்கள் வேளாண்மை அல்லாத பிற நோக்கங்களுக்காக உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், பிற சங்கங்கள், நம்பகங்கள், தனியார் மற்றும் தனியார் அமைப்புகளுக்கு வருவாய் நிலை ஆணை எண். **24ஏ–**ன்கீழ், குறைந்தபட்சம் **3** ஆண்டுகளுக்கும், அதிகபட்சமாக **30** ஆண்டுகளுக்கும் தற்காலிக அடிப்படையில் உள்ள வழக்கமான நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகைக்கு நிலம் வழங்கப்படுகின்றன;

- நிலம் எந்த நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்கப்படுகிறதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
- குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலத்தை உள்குத்தகைக்கு விடக்கூடாது.

- குத்தகை நிபந்தனை மீறப்படின், எவ்வித இழப்பீடுமின்றி நிலம் அரசு வசம் எடுத்துக் கொள்ளப்படும்.

தற்போது நடைமுறையிலுள்ள ஆணைகளின்படி ஆண்டு ஒன்றுக்கு வணிகமற்ற நோக்கத்திற்கு நிலத்தின் மதிப்பில் 7 விழுக்காடும், வணிக நோக்கத்திற்கு 14 விழுக்காடும் குத்தகை கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டு, குத்தகைத் தொகை வசூல் செய்யப்படுகிறது.

நீண்ட காலக் குத்தகை இனங்களில், ஆண்டு குத்தகைக் கட்டணம் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மறு நிர்ணயம் செய்யப்படுகிறது. சந்தை மதிப்பு மற்றும் வழிகாட்டி பதிவேட்டின்படியான மதிப்பு இவற்றில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் குத்தகை தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது. இருப்பினும் சில சிறப்பு நேர்வுகளில் பொது நலன் கருதி பெயரளவு ஆண்டுக் குத்தகையும், நீண்டகாலக் குத்தகையும் அரசால் வழங்கப்படுகிறது. குத்தகை வழங்குதல் மற்றும் புதுப்பித்தலுக்காக, வருவாய்த்துறையின் பல்வேறு அலுவலர்களுக்கான நிதி அதிகார வரம்பு, அரசாணை (நிலை) எண் 527, வருவாய் [நி.மு.2(1)] துறை, நாள் 28.11.2014–இன்படி கீழ்க்கண்டவாறு சமீபத்தில் திருத்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை   குத்தகை வழங்குவதற்கான நிதி அதிகார வரம்பு

| அலுவலர்கள் | நிதி அதிகார வரம்பு (ரூ) |
| --- | --- |
| (1) வட்டாட்சியர் | ஏதுமில்லை |
| (2) வருவாய் கோட்டாட்சியர் | ரூ.50,000/– வரை |
| (3) மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.1,00,000/– வரை |
| (4) மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ.4,00,000/– வரை |
| (5) நில நிர்வாக ஆணையர் | ரூ.5,00,000/– வரை |
| (6) அரசு | ரூ.5,00,000/–க்கு மேல் |

## 3.7 உப்பள நிலங்களை குத்தகைக்கு வழங்குதல்

வருவாய் நிலை ஆணை எண். 24அ–ன்படி, கடற்கரை பகுதியில் உள்ள உப்பள நிலங்கள் உப்பு உற்பத்தி செய்ய குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் உப்பு உற்பத்திக்காக வழங்கப்படும் நிலங்களுக்கு குத்தகைத் தொகை மற்றும் உரிமத்தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | | |
| --- | --- | --- |
| 1 | குத்தகைத் தொகை | ரூ.5/– வீதம் ஒரு ஏக்கருக்கு/ ஒருவருடத்திற்கு |
| 2 | உரிமத்தொகை | உற்பத்தி செய்யப்பட்ட உப்பு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2/– வீதம் குறைந்தபட்சமாக ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு ரூ.100/– |
| 3 | தலவரி 100% | ரூ.5/– ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு |
| 4 | தலமேல் வரி 500 % | ரூ.25/– ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு |
| | **மொத்தம்** | ரூ.135/– ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |

இந்த குத்தகைத் தொகை பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவானதென்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு உப்பளங்களுக்கென குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களின் பரப்பளவு 27,777 ஏக்கராகும்.

### 3.8 ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பதும், ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் கண்காணிப்பதும் வருவாய்த்துறையின் முதன்மையான பணியாகும். அரசு நிலங்களை பாதுகாக்கவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும் கீழ்க்காணும் சட்டங்களில் வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன ;

1. தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920
3. தமிழ்நாடு நீர்நிலைகள் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 2007
4. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001
5. தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1994
6. தமிழ்நாடு பொதுக் கட்டடம் (அனுமதிக்கப்படாத ஆக்கிரமிப்பு) சட்டம், 1975
7. தமிழ்நாடு ஊராட்சி சட்டம், 1958

அரசாணை (நிலை) எண்.41, வருவாய்த்துறை, நாள் 20.01.1987–இல் நீர்நிலை ஆதாரங்களான குளம், குட்டை, ஓடை, கால்வாய் மற்றும் நீர்ப்பிடிப்பு போன்ற நீர்நிலைகளைப் பாதுகாக்கவும், அவற்றில் ஆக்கிரமிப்புகளைத் தவிர்க்கும் வகையில் மேற்கண்ட நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த தடை ஆணையும் விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையை வழுவாது கடைபிடிக்குமாறு அரசாணை (நிலை) எண்.186, வருவாய்த்துறை, நாள் 29.04.2003–இல் தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மனு எண்.20186/2000–இல் வெளியிட்ட தீர்ப்பில், மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளில் உள்ள சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அகற்றிடவும், அதனை பழைய நிலைக்குக் கொண்டு வரவும் உத்தரவிட்டுள்ளது.

எனவே, நீர்நிலை ஆதாரங்களான குளங்கள், ஆறுகள், ஏரிகள், குட்டைகள் மற்றும் ஏனைய நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, பொதுப்பணித் துறை

மற்றும் காவல்துறையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு உச்சநீதிமன்ற சிறப்பு விடுப்பு மனு எண்.3109/2011 மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண்.1132/2011 ஆகியவற்றின் மீது வழங்கப்பட்ட உத்திரவுகளின் அடிப்படையில், கிராமப் பஞ்சாயத்து மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்புவிக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றுவதற்கு, அரசு ஒரு செயல் திட்டத்தை வகுத்து, அதன்படி ஆக்கிரமணங்களை அகற்றி, அந்நிலங்களை சமுதாய பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றுவது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண். 26722/2013, நாள் 11.08.2014 மற்றும் பல்வகை மனு எண் 1/2013, நாள் 08.10.2014–இல் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், அரசு ஆணை (நிலை) எண் 540, வருவாய் [நிமு.6(2)] துறை, நாள் 04.12.2014–இன்படி ஒவ்வொரு வட்டம் / கோட்டம் / மாவட்ட அளவில், குறை களைவு குழுக்கள் அமைத்து ஆணையிட்டுள்ளது. இப்பணியின் முன்னேற்றத்தை வரையறைக்குட்பட்ட காலவரம்புக்குள் நடவடிக்கை

மேற்கொள்ளப்படுகிறதா என்பதை மாதந்தோறும் நடத்தப்படும் மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் இயங்கும் மாவட்ட அளவிலான இயக்க குழுவில் ஆய்வு செய்யுமாறும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**3.9 மீட்கப்பட்ட அரசு நிலங்களை வேலியிட்டு பாதுகாத்தல்**

இத்திட்டத்திற்காக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் கொண்டு, நாளது தேதி வரையில் சுமார் ரூ.**114.54** கோடி மதிப்புள்ள **320.52** ஏக்கர் பரப்பளவுள்ள அரசு நிலங்கள் மீட்கப்பட்டு ரூ.**1.49** கோடி மதிப்பீட்டில் வேலியிட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

**3.10 நில எடுப்பு**

பொது நோக்கத்திற்காக வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு முன்னேற்றத்தை உள்ளடக்கி அத்துடன் பாதிக்கப்பட்ட, பின்தங்கிய மக்களின் தேவைகளை பூர்த்தி செய்திடும் பொருட்டு நிலத்தை கையகப்படுத்தும் பணி நில நிர்வாகத் துறையின் மேற்பார்வையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **31.12.2013** வரை மத்திய நில எடுப்பு சட்டம் **1894**, (சட்டம் **1/1894**)–இன் கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. இச்சட்டத்தைத் தவிர, மாநில அரசு, சமூக ரீதியாக பின்தங்கியுள்ள வகுப்பினர்களுக்கு வீட்டுமனை மற்றும் பிற

தேவைகளுக்கு நிலம் வழங்கவும், அத்துடன் தொழில் ரீதியான உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காகவும், நெடுஞ்சாலை வளர்ச்சிக்காகவும் பின்வரும் மூன்று சட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

1. **1978** ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் நல திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் **31/1978)**
2. **1997** ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் ( தமிழ்நாடு சட்டம் **10/1999)**
3. **2001** ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் **34/2002)**

ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த மத்திய நில எடுப்பு சட்டம், **1894**–யை ரத்து செய்துவிட்டு, புதிய நில எடுப்பு சட்டமான "நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம், **2013 (30/2013)**" (The Right to Fair Compensation Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act 2013)–யை இயற்றி உள்ளது. இச்சட்டம் **1.1.2014** முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த புதிய நில எடுப்பு சட்டத்தின்படி புனர்வாழ்வு

மற்றும் மீள்குடியமர்வு, நிலம் கையகப்படுத்துதலின் ஒருங்கிணைந்த பகுதியாகியுள்ளது.

ஏற்கனவே மத்திய நில எடுப்புச் சட்டம், 1894–இன் கீழ் நடவடிக்கை தொடரப்பட்ட இனங்களில் அதாவது, பிரிவு 4(1)–இன் கீழான வரைவு அறிவிக்கை வெளியிடப்பட்ட நேர்வுகளில், புதிய நில எடுப்புச் சட்டப் பிரிவு 24(1)(a)–இல் உள்ள ஷரத்துகளின் அடிப்படையில், மத்திய நில எடுப்புச் சட்டம் 1894–இன் கீழ் பிரிவு 6–இன் கீழான வரைவு விளம்பல் வெளியிடலாம் என்றும், இருப்பினும், இந்த இனங்களுக்கு இடைக்கால சரியீட்டுத் தொகை ஏற்கெனவே இருந்த மத்திய நில எடுப்புச் சட்டம் 1894–இன் கீழ் நிர்ணயம் செய்து வழங்கிடவும், அதன் பின் புதிய மத்திய நில எடுப்புச் சட்டத்தின் கீழ் கூடுதல் சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்க அறிவுறுத்தி இதற்கான வழிமுறைகள் அரசின் வருவாய்த் துறையால் அரசாணை (நிலை) எண்.88, நாள் 21.2.2014–இல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1997, தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் 2001 மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் நல திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல்

சட்டம் 1978 ஆகிய சட்டங்களின் கீழ் நில எடுப்பு நடவடிக்கை தொடரப்பட்ட இனங்களில், புதிய நில எடுப்புச் சட்டம் (தமிழ்நாடு திருத்த மசோதா 2014) அடிப்படையில், அரசாணை (நிலை) எண்.45, தொழில் துறை, நாள் 14.5.2014, அரசாணை (நிலை) எண். 59, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 29.5.2014 மற்றும் அரசாணை (நிலை) எண்.105, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.12.2014–இன்படி ஏற்கெனவே நடைமுறையில் உள்ள சட்டப் பிரிவுகளின்படி இடைக்கால சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்திடவும், அதன் பின் புதிய மத்திய நில எடுப்புச் சட்டத்தின் கீழ் கூடுதல் சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி புதிய நில எடுப்புச் சட்டத்தில், பிரிவு 105–இன்படி 4–ஆம் அட்டவணையில் 13 மத்திய நில எடுப்புச் சட்டங்கள் விலக்களிக்கப்பட்டுள்ளன. மேற்படி 13 மத்திய சட்டங்களை போன்று, மாநில சட்டங்களின் கீழும் நில எடுப்பு நடவடிக்கையை தொடர்ந்திடும் வகையில் மாநில அரசு புதிய நில எடுப்புச் சட்டத்திற்கு தமிழ்நாடு திருத்தச் சட்டம் 1/2015 கொண்டு வந்து, புதிய நில எடுப்புச் சட்டத்திற்கு மாநில திருத்த மாசோதா குடியரசு தலைவர் அவர்களால் 1.1.2015 அன்று ஒப்புதல்

அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி புதிய மத்திய நில எடுப்புச் சட்டப் பிரிவு 105–இன் தொடர்ச்சியாக பிரிவு 105–A புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. அவற்றின் மூலம் மேற்படி மாநில நில எடுப்பு மூன்று சட்டங்களும் 5–ஆம் அட்டவணையில் சேர்க்கப்பட்டு, இம்மாநில நில எடுப்புச் சட்டங்களின் கீழ் நிலம் கையகம் செய்யப்படவுள்ள நேர்வுகளில் 1.1.2014 முதல் முதன் நிலை அறிவிப்பு வெளியிடப்பட்ட இனங்களுக்கு புதிய நில எடுப்புச் சட்டத்தின்படி (மத்திய சட்டம் 30/2013) சரியீடு மற்றும் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பயன்களை சேர்த்து வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மூன்று மாநில நில எடுப்புச் சட்டங்கள் தொடர்பாக உரிய செயல் அறிவுரைகள் கொண்ட மூன்று அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 3.11 சிறுபாசனக் கணக்கெடுப்பு புள்ளி விவர பகுத்தாய்வு விவரம் (ஆர் எம் ஐ எஸ்)

சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான விரிவான புள்ளி விவரங்களைச் சேகரித்து ஒருமைப்படுத்தும் நோக்கத்துடன் மத்திய அரசின் நிதி உதவியுடன் சிறுபாசனப் புள்ளி விவர சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணக்கெடுப்பின் ஒருங்கிணைப்புத் தலைவராக நில நிர்வாக ஆணையரை தமிழக அரசு நியமித்துள்ளது.

சிறுபாசனக் கணக்கெடுப்புத் திட்டம் கீழ்க்காணும் நோக்கங்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது.

1. ஒவ்வொரு ஐந்தாண்டும் சிறுபாசனக் கணக்கெடுப்பு நடத்தி அதன் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து சிறுபாசனத் திட்டங்களும் கணக்கெடுக்கப்படுகின்றன.
2. சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான புள்ளி விவரத் தொகுப்பினை பகுத்தாய்வு செய்து காலாண்டு மற்றும் ஆண்டறிக்கைகள் தயாரித்து மத்திய அரசிற்கு அனுப்பப்படுகின்றன.

**ஐந்தாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு (2013–2014)**

**5**–வது சிறுபாசன கணக்கெடுப்பு **2013–14** ஆண்டை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு ஜூலை, **2014** முதல் தொடங்கப்பட்டுள்ளது. மாநில மற்றும் மாவட்ட அளவிலான பயிற்சி, செப்டம்பர் மற்றும் அக்டோபர் **2014**–இல் வழங்கப்பட்டது. **2014** டிசம்பர் **1**–ஆம் நாள் முதல் களப்பணி தொடங்கப்பட்டு தற்போது களப்பணி முழுவதும் முடிக்கப்பட்டுள்ளது. கணினி பதிவிற்கான மென்தகடு மத்திய அரசிடமிருந்து விரைவில் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5**வது சிறுபாசன கணக்கெடுப்பு பணிக்காக மத்திய அரசால் ரூ.**2,79,08,203/–** (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தொன்பது

இலட்சத்து எட்டாயிரத்து இருநூற்று மூன்று மட்டும்) ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில், வட்ட, மாவட்ட மற்றும் மாநில அளவிலான மேற்பார்வை பணியாளர்களுக்கான மதிப்பூதியத் தொகை, கிராம நிர்வாக அலுவலருக்கான களப்பணி தொகை, கணிப்பொறி பதிவு மேற்கொள்வதற்கான தொகை மற்றும் இதர செலவினத் தொகையும் அடங்கும்.

### 3.12 சிறப்பு முயற்சிகள்

#### 3.12.1 தொன்மையான நிலப்பதிவுருக்களை எண்முறைமயமாக்கல் (Digitalization)

எதிர்கால பயன்பாட்டிற்காக, தொன்மை வாய்ந்த நிலப்பதிவுருக்களை பாதுகாக்கும் பொருட்டு, முன்னோடித் திட்டமாக சென்னை மாவட்ட ஆட்சியரகம் மற்றும் அதன் வட்ட அலுவலகங்களில் "எல்காட்" நிறுவனத்தின் மூலம் பதிவுருக்களை எண்முறை மயமாக்கும் திட்டம் (Digitalization) துவங்கப்பட்டது. இத்திட்டம் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையில் உள்ள, Old Settlement Registers (OSR) ஆகியவற்றையும் எண்முறை மயமாக்க (Digitalization)

உத்தேசிக்கப்பட்டுள்ளது. பகுதி–II திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.50 இலட்சத்தில், ரூ.46.14 இலட்சம் எல்காட் நிறுவனத்திற்கும், ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறைக்கும் வழங்கப்பட்டுள்ளது. நாளது வரை, சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் தொடர்பான 2.10 இலட்சம் பக்கங்கள் கொண்ட பழைய நில ஆவணங்கள் எண்முறை மயமாக்கப்பட்டுள்ளது (Digitalized). மேலும், நடப்பு ஆண்டில் இத்திட்டம் இந்த மூன்று மாவட்டங்களிலும் முடிக்கப்படும்.

**3.12.2 அரசு நிலவங்கி உருவாக்குதல்**

தேசிய தகவல் ஆணையத்தின் உதவியுடனும் ELCOT நிறுவனத்தில் கணினி தொழில் நுட்ப உதவியுடனும் அரசு நில வங்கி திட்டம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

தமிழ் நிலம் மென்பொருள் “அ” பதிவேட்டில் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட நிலங்கள், பிரத்யேக குறியீட்டின் வாயிலாக, அரசு நில விவர வங்கிக்கு என உருவாக்கப்பட்ட மென்பொருள் மூலமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள், கிராமம், வட்டம் மற்றும் மாவட்டங்களில் வகைபாடு வாரியாக உள்ள புறம்போக்கு நிலங்கள் குறித்த விவரங்களைக்

காணலாம். மேலும், முன்னோடித் திட்டமாக பெரம்பலூர் மாவட்டத்தில், கிராமப் புலப்படங்களில், புறம்போக்கு என வகைபாடுடைய நிலங்கள், கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றை செயற்கைக் கோள் உதவியுடன் கணினியில் பார்வையிடலாம்.

மேற்படி திட்டத்திற்கு இதுவரை ரூ.**45.99** இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

## 4. நிலச்சீர்திருத்தம்


தமிழ்நாடு வருவாய் வாரியம் நீக்கச் சட்டம் 1980 (தமிழ்நாடு சட்டம் 36/1980) பிரிவு 3–இன் கீழ், 1.12.1980 அன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான அறிவிக்கையின்படி, 1.12.1980 முதல் வருவாய் வாரியம் கலைக்கப்பட்டது. வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பிறகு, நிலச்சீர்திருத்தம், நில நிர்வாகம் மற்றும் வருவாய் நிர்வாகம் ஆகிய துறைகள் வருவாய்த் துறையின் கீழ் உருவாக்கப்பட்டன. நிலச்சீர்திருத்தத் துறை, வேளாண் நிலம் (ஊரகம்) சம்பந்தமான சட்டம் மற்றும் விதிகளை செயல்படுத்துகிறது. இத்துறை நிலச்சீர்திருத்தம், குத்தகைச் சட்டங்கள், பூமிதானம் மற்றும் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் எனும் சமூக பாதுகாப்பு திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. நிலச்சீர்திருத்த ஆணையர் துறைத் தலைவராகவும், அவருக்கு உதவியாக தலைமையிடத்தில், நிலச்சீர்திருத்த இயக்குநர், 1. இணை இயக்குநர், 2. உதவி ஆணையர்கள் மற்றும் நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

2014–15–ஆம் ஆண்டில், பொதுமக்கள் தங்களது தேவைகளை விரைவாகவும், எளிதாகவும் அந்தந்த மாவட்டங்களிலேயே பெறும் வகையில், நிலச்சீர்திருத்தத் துறை மறுசீரமைக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, மாநிலத்தில் செயல்பட்டு வந்த 6 நிலச்சீர்திருத்த உதவி ஆணையர்கள் அலுவலகங்களுக்குப் பதிலாக, 31 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் (சென்னை நீங்கலாக), ஒரு நிலச்சீர்திருத்தப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், நிலச்சீர்திருத்தச் சட்டம் மற்றும் விதிகளில் உள்ள அதிகாரங்கள் சார்ஆட்சியர்/ வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் பணி முன்னேற்றம் மாவட்ட ஆட்சியர் மூலமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், பல்வேறு குத்தகைச் சட்டங்களை செயல்படுத்துவதற்கு, துணை ஆட்சியர்களின் கீழ், 10 வருவாய் நீதிமன்றங்கள் முதன்மை செயலாளர்/ நிலச்சீர்திருத்த ஆணையரின் கண்காணிப்பில் செயல்பட்டு வருகின்றன. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் பூமிதானம் ஆகியவை மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கீழ், மாவட்ட நிர்வாகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 4.1 கட்டமைப்பு

நிலச்சீர்திருத்த துறையின் கட்டமைப்பு கீழ்க்கண்டவாறு;




நிலச்சீர்திருத்தத் துறைக்காக ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு:

**அட்டவணை 4.1 நிலச்சீர்திருத்தத் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள்**

| **வ.எண்** | **பணியிடங்கள் வகை** | **ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | முதன்மைச் செயலாளர்/ நிலச்சீர்திருத்த ஆணையர் | 1 |
| 2 | நிலச்சீர்திருத்த இயக்குநர் | 1 |
| 3 | இணை இயக்குநர் | 1 |
| 4 | நிதிஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் | 1 |
| 5 | உதவி ஆணையர்கள்/ தனித்துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்) உட்பட | 12 |
| 6 | கண்காணிப்பாளர்கள்/ துணை வட்டாட்சியர் | 21 |
| 7 | உதவியாளர், உதவியாளர் நிலை வருவாய் ஆய்வாளர்கள் | 44 |
| 8 | சுருக்கெழுத்து தட்டச்சர்/ தட்டச்சர் | 35 |
| 9 | இளநிலை உதவியாளர் | 21 |
| 10 | இதர பணியிடங்கள் | 76 |
| | **மொத்தம்** | **213** |

## 4.2 நில உச்சவரம்பு கொள்கை

ஒரு சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாய நில உடைமைகள் ஒரு முக்கிய ஆதாரம் என்பதால், விவசாய வேளாண் நில உடைமைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிடும் வகையில், விவசாய நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்புக்கு மேல் உள்ள நிலங்களை கையகப்படுத்தி அதனை நிலமற்ற ஏழைகளுக்கு பிரித்து வழங்குதல் அவசியமாகின்றது.

எனவே, நில உடைமைகள் ஒரு சிலரிடம் குவிந்து கிடப்பதை பரவலாக்குவதை உறுதி செய்யும் வகையில், இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு **39–**இன் உட்பிரிவு (b) மற்றும்

(c)–இன்படி தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் **1961 (**தமிழ்நாடு சட்டம் **58/1961)** இயற்றப்பட்டது.

## 4.2.1 நடைமுறையில் உள்ள உச்சவரம்பு

தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம், **1961** அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டு நில உச்சவரம்பு **15.2.1970** முதல் நடைமுறையில் கீழ்கண்டவாறு உள்ளது.

**அட்டவணை 4.2 நிலச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் உள்ள உச்சவரம்பு**

| வ.எண் | விவரம் | அனுமதிக்கப்பட்ட நிலப்பரப்பு |
|---|---|---|
| 1 | குடும்பம்<br>i) ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு (தனியார் அறக்கட்டளை மற்றும் நிறுவனம் உட்பட) | 15 தர ஏக்கர் |
| | ii) ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு | 5 தர ஏக்கர் |
| | அதிகபட்ச உச்சவரம்பு | 30 தர ஏக்கர் |
| | iii)இதனைத் தவிர சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியில் சீதன நிலமாக 10 தர ஏக்கர் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பெண் உறுப்பினர் பெயரில் வைத்துக் கொள்ளலாம். | |
| 2 | பொது அறக்கட்டளைகள் (Public Trusts) | |
| | i) 1.3.1972 தேதியில் இருந்த தர்மஸ்தாபன பொது அறக்கட்டளை (Public Trust of Charitable nature) | 5 தர ஏக்கர் |
| | ii) 1.3.1972 தேதிக்குப் பிறகு எந்த ஒரு பொது அறக்கட்டளையும் நிலங்களை வாங்க வழிவகை இல்லை. திருத்தச் சட்டம் 29/87ன்படி நிலங்களை வைத்துக்கொள்ள அரசின் அனுமதி வேண்டும். | |
| | iii)1.3.1972 தேதிக்குமுன் இருந்த மத சார்பான பொது அறக்கட்டளை (Religious Trust of Public Nature) நில உச்சவரம்பு சட்டத்திற்குள் வராது. | |

*தரஏக்கர்*

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு **3 (40)–**இன்படி தர ஏக்கர் என்பது சம்பந்தப்பட்ட நில தீர்வையினை (Assessment) அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

உதாரணம்

*நன்செய் நிலம்*

நிலத்தீர்வை ரூ.**4/–**க்குள் இருந்தால் **2** ஏக்கர் நன்செய் நிலத்திற்கு**– 1** தர ஏக்கர்

*புன்செய் நிலம்*

நிலத்தீர்வை ரூ.**1.25/–**க்குள் இருந்தால் **4** ஏக்கர் புன்செய் நிலத்திற்கு**– 1** தர ஏக்கர்

### 4.2.2 தொழில்/ வணிக நிறுவனங்களுக்கு அனுமதி

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு **3 (34)–**இன்படி நிறுவனம் என்பது, "தனி நபர்" என்ற பொருள் வரையறைக்குட்பட்டது. இதனால் நிறுவனங்கள் **15.000** தர ஏக்கர் நிலங்கள் வரை வைத்துக் கொள்ளலாம். மாநிலத்தில் தொழில் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், தொழில் அல்லது வணிக நிறுவனங்கள் உச்சவரம்பிற்கு மிகையாக நிலங்களை வைத்துக்

கொள்ள சட்டப்பிரிவு 37-A மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. தற்போதைய திருத்தப்பட்ட சட்டம் **23/2010** மற்றும் விதிகளின் கீழ், திருத்தம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தோ அல்லது நிறுவனம் அவ்வாறாக நிலத்தை வாங்கிய நாளிலிருந்தோ **180** நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

### 4.2.3 பொது அறக்கட்டளைக்கு அனுமதி

பொது அறக்கட்டளைகள் கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக நிலங்களை வைத்துக்கொள்ள சட்டப்பிரிவு 37-B மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, திருத்தப்பட்ட சட்டம் **23/2010** மற்றும் விதிகளின் கீழ், திருத்தம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தோ அல்லது பொது அறக்கட்டளை நிலத்தை வாங்கிய நாளிலிருந்தோ **180** நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

### 4.3 வருவாய் நீதிமன்றங்கள்

நில உடமையாளருக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகளை குத்தகைச் சட்டங்கள் கீழ் முடிவு செய்வதற்காக தற்போது மாநிலத்தில் **1.**கடலூர்,

2.மயிலாடுதுறை, 3.திருவாரூர், 4.தஞ்சாவூர், 5.மன்னார்குடி, 6.திருச்சிராப்பள்ளி, 7.லால்குடி, 8.நாகப்பட்டினம், 9.மதுரை மற்றும் 10.திருநெல்வேலி ஆகிய பத்து இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் தனித்துணை ஆட்சியரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 4 வருவாய் நீதிமன்றங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக 2013–இல் தொடங்கப்பட்டவை ஆகும். இந்த 10 வருவாய் நீதிமன்றங்கள், 5 குத்தகை சட்டங்கள் மற்றும் விதிகளைச் செயல்படுத்துகின்றன.

### 4.3.1 வருவாய் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்

வருவாய் நீதிமன்றங்கள் அனைத்திலும் 9,806 வழக்குகள் 31.5.2011 அன்று நிலுவையில் இருந்தன. 1.6.2011 முதல் 31.07.2015 முடிய உள்ள காலத்தில் 25,479 வழக்குகள் வரப்பெற்று, 26,048 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. 31.07.2015 அன்று 9,237 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

### 4.3.2 குத்தகை சட்டங்கள்

கீழ்க்கண்ட சட்டங்கள் வருவாய் நீதிமன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## I) தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55)

நில உடமையாளருக்கு குத்தகைத் தொகை கொடுக்காமல் இருத்தல், குத்தகை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், வேளாண்மை அல்லது தோட்டப்பயிர் அல்லாத பிற காரணத்திற்காக நிலத்தினை உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையை மறுத்தல் தவிர, வேறு காரணங்களுக்காக குத்தகைதாரர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

இச்சட்டத்தின் கீழ் **1.6.2011** அன்று **1,590** வழக்குகள் நிலுவையில் இருந்தன. **01.06.2011** முதல் **31.07.2015** முடிய **1,295** வழக்குகள் வரப்பெற்றது. **31.07.2015** வரை **2,234** வழக்குகள் முடிவு செய்யப்பட்டு **31.07.2015** அன்று **651** வழக்குகள் நிலுவையில் உள்ளன.

## II) தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம் 24/56)

இச்சட்டம் மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நில உரிமைதாரருக்கு பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகையை பணமாகவோ அல்லது விளை பொருளாகவோ செலுத்தலாம். பயிரிடும் குத்தகைதாரர்கள் பயிரிடுவதற்கான செலவுகள் முழுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நில உரிமையாளர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைகளுக்கும் பொறுப்பாவார்கள்.

இச்சட்டத்தின் கீழ் 1.6.2011 அன்று 289 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 1.6.2011 முதல் 31.07.2015 முடிய 461 வழக்குகள் வரப்பெற்று மேற்படி காலத்தில் 700 வழக்குகள் முடிவு செய்யப்பட்டு 31.07.2015 அன்று 50 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

**III) தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிர்வாக மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61)**

தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின்படி, பொது அறக்கட்டளைகளின் நிர்வாகத்தினை வரைமுறைபடுத்தி வேளாண் நிலங்களை சொந்த சாகுபடி செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவோ வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறக்கட்டளைகள் தங்களுடைய சொந்த சாகுபடிக்கு, அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக்கொள்ளலாம். அதற்கு மேலுள்ள விவசாய நிலத்தை பிறருக்கு குத்தகைக்குவிட வேண்டும். இச்சட்டம் பொது அறக்கட்டளைகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையே உள்ள உறவை வரன்முறைப்படுத்தவும், அவர்களிடையே ஏற்படும் தகராறுகளை வருவாய் நீதிமன்றங்கள் மூலம் தீர்வு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் **1.6.2011** அன்று **7,630** வழக்குகள் நிலுவையில் இருந்தன. **1.6.2011** முதல் **31.07.2015** முடிய **22,904** வழக்குகள் வரப்பெற்று

மேற்படி காலத்தில் **22,145** வழக்குகள் முடிவு செய்யப்பட்டு **31.07.2015** அன்று **8,389** வழக்குகள் நிலுவையில் உள்ளன.

**IV) தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 10/69)**

இச்சட்டத்தில் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்வதன் மூலம் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ், வட்டாட்சியர் குத்தகை உரிமையினை பதிவு செய்யும் பதிவு அலுவலர் ஆவார். இதுவரை **2,59,615** நபர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச்சட்டத்தின் கீழ் **01.06.2011** அன்று **198** வழக்குகள் நிலுவையில் இருந்தன. **31.07.2015** முடிய **282** வழக்குகள் வரப்பெற்று மேற்படி காலத்தில் **344** வழக்குகள் முடிவு செய்யப்பட்டு **31.07.2015** அன்று **136** வழக்குகள் நிலுவையில் உள்ளன.

V) **தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் திருத்தியவாறு**

இச்சட்டத்தில் குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து, **1.4.1990** தேதியில் அனுபவித்து வரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் மேற்கண்ட பலன்களைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் **01.06.2011** முதல் **31.07.2015** வரை **625** வழக்குகள் முடிவு செய்யப்பட்டு **31.07.2015** அன்று **11** வழக்குகள் நிலுவையில் உள்ளன.

**4.3.3 நியாய ஊதியங்கள்**

**தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969 மற்றும் குறைந்தபட்ச ஊதியச் சட்டம்**

இச்சட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட

விவசாயப் பணிகளுக்காக நியாய ஊதியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. ஏனைய இதர மாவட்டங்களுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் பின்பற்றப்பட்டு வருகிறது. இச்சட்டங்கள் மாவட்ட ஆட்சியர்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 4.3.4 தனித் துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்) அதிகார எல்லைகள் கீழ்க்கண்டவாறு :

| | | |
|---|---|---|
| 1 | கடலூர் | கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் வருவாய் மாவட்டங்கள் முழுவதும். |
| 2 | திருச்சிராப்பள்ளி | பெரம்பலூர், அரியலூர், சேலம், கரூர், புதுக்கோட்டை, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள் முழுவதும் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி மணப்பாறை மற்றும் திருவெரும்பூர் வட்டங்கள். |
| 3 | லால்குடி | திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்தில், லால்குடி, முசிறி, மண்ணச்சநல்லூர், துறையூர், தொட்டியம் மற்றும் ஸ்ரீரங்கம் வட்டங்கள் |
| 4 | மதுரை | மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் வருவாய் மாவட்டங்கள் முழுவதும். |
| 5 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி வருவாய் மாவட்டங்கள் முழுவதும். |
| 6 | திருவாரூர் | திருவாரூர் வருவாய் மாவட்டத்தில் திருவாரூர், குடவாசல், வலங்கைமான், நன்னிலம் மற்றும் நீடாமங்கலம் வட்டங்கள் |
| 7 | மன்னார்குடி | திருவாரூர் வருவாய் மாவட்டத்தில், மன்னார்குடி மற்றும் திருத்துறைப்பூண்டி வட்டங்கள் |
| 8 | மயிலாடுதுறை | நாகப்பட்டினம் வருவாய் மாவட்டத்தில் மயிலாடுதுறை, தரங்கம்பாடி, சீர்காழி மற்றும் குத்தாலம் வட்டங்கள் |
| 9 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் வருவாய் மாவட்டத்தில், நாகப்பட்டினம் கீழ்வேளூர், திருக்குவளை மற்றும் வேதாரண்யம் வட்டங்கள் |
| 10 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் வருவாய் மாவட்டம் முழுவதும். |

## 4.4. பூமிதான வாரியம்

பூமிதான இயக்கம் ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங்கப்பட்டது. ஆச்சார்ய வினோபாபாவே அவர்கள் தமிழ்நாட்டில் **13.3.1956** முதல் **18.4.1957** வரை பல்வேறு மாவட்டங்களில் பாதயாத்திரையாக சுற்றுப்பயணம் செய்து பூமிதான இயக்கத்திற்கு நிலங்களை தானமாகப் பெற்றார். அவ்வாறு பெறப்பட்ட தானத்தை முறைப்படுத்தி நில உடைமையை பூமிதான வாரியத்தின் பெயரில் மாற்றி அதனை நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்க **"தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம் 1958" (Tamil Nadu Bhoodan Yagna Act 1958)** இயற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து விதிகளும் இயற்றப்பட்டது. பூமிதான நிலங்களை பூமிதான வாரியத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவ்வாரியம் அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டது ஆகும்.

பூமிதான வாரியத்திற்கு **28,050** ஏக்கர் நிலங்கள் தானமாக பெறப்பட்டுள்ளன. இவைகளில், **20,494** ஏக்கர் நிலங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள நிலங்களில், **7,271** ஏக்கர், வழக்கு, பத்திரப்பதிவு, உறுதியாக்கம் முதலானவைகளின் கீழ் உள்ளன.

2012–13–ஆம் ஆண்டு முதல் பூமிதானம் தொடர்பான பணிகளில் மாவட்ட நிர்வாகம் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு தலைமையிடத்திலிருந்து கண்காணிக்கப்பட்டு வருவதால் நிலுவைப்பணிகளிலும், பூமிதான பணிகளை தொடர்வதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**4.5 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011**

அரசாணை (நிலை) எண்.265, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள் 10.9.2011–இன்படி 'முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்' 10.9.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**4.5.1 தகுதிகள்**

**விவசாய உறுப்பினர்கள்**

விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 65 வயது வரை உள்ள தொழிலாளர்கள், 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குறு/சிறு விவசாயிகள், பயிரிட குத்தகைதாரர்கள் இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாக பதிவு செய்ய

தகுதியுடையவர்கள் ஆவார்கள். விவசாயத் தொழில் என்பது, விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்களான தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்த்தல், கால்நடை வளர்த்தல் மற்றும் பால்பண்ணை தொழில், தீவன பயிர் செய்தல், மேய்ச்சல், நாற்று வளர்த்தல், கோழிப்பண்ணை, மரங்கள் வளர்த்தல் மற்றும் உள்ளூர் மீன்பிடித்தல் ஆகும்.

**சார்ந்து வாழும் உறுப்பினர்கள்**

உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தின்கீழ் உறுப்பினராகப் பதிவு செய்ய தகுதியானவர்கள். அவர்கள் உறுப்பினரின்,

i. மனைவி அல்லது கணவன் (நேர்விற்கேற்ப)
ii. குழந்தைகள்
iii. இறந்துவிட்ட மகனுடைய மனைவி (விதவை மருமகள்) மற்றும் குழந்தைகள் மற்றும்
iv. பெற்றோர்

**4.5.2 உறுப்பினர்களைக் கணக்கெடுத்தல்**

பயனாளிகள் இத்திட்டத்தின் பயன்களைத் தொடர்ந்து பெறும்பொருட்டு **72,40,387** குடும்ப அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் முழுமையான

கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு அவைகள் வருவாய் கிராம அளவில் கணக்கெடுப்பு பதிவேடுகளில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், கணினியிலும் விவரங்கள் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் **(31.07.2015)**, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்;

**அட்டவணை – 4.3 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011–ன் கீழ் உறுப்பினர் கணக்கெடுப்பு விவரம்.**

| | | | |
|---|---|---|---|
| 1 | விவசாய உறுப்பினர்கள் | – | 1,59,58,265 |
| 2 | சார்ந்து வாழும் உறுப்பினர்கள் | – | 1,17,49,934 |
| | **மொத்தம்** | | **2,77,08,199** |

இத்திட்டத்தின் கீழ் திருமணம், புதிய விவசாய/ சார்ந்த உறுப்பினர், இறப்பு போன்ற காரணங்களுக்காக உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் நீக்குதல் தகுதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

### 4.5.3 நிதி உதவி

இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட நல உதவிகள் உறுப்பினர்களுக்கும் மற்றும் உறுப்பினர்களைச் சார்ந்தவர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

**உறுப்பினர்களுக்காக,**

(1) திருமண உதவித்தொகை

(2) முதியோர் ஓய்வூதியம்

(3) உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி

(4) விபத்து நிவாரணம்

(5) இயற்கை மரண உதவித்தொகை

(6) ஈமச் சடங்கு செலவு

**சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக,**

(1) கல்வி உதவித்தொகை

(2) திருமண உதவித்தொகை

(3) எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் அனாதை குழந்தைகளுக்கான உதவித்தொகை

(4) ஈமச்சடங்கு செலவு

விவசாய உறுப்பினரின் இறப்புக்கும் பின்னரும் அவரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் அவர்களுக்கான உதவித் தொகையினை தொடர்ந்து பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ் அனைத்து உதவித் தொகைகளும் தனி வட்டாட்சியர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலமாக

மாவட்ட ஆட்சியர்களின் மேற்பார்வையில் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழான உதவித்தொகையின் சிறப்பு அம்சங்கள்:

**அ) உறுப்பினர்களுக்காக**

*1. திருமண உதவி*

விவசாய உறுப்பினரின் சட்டப்படியான திருமணத்திற்கு ஆண்களுக்கு ரூ.8,000/–மும் பெண்களுக்கு ரூ.10,000/–மும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் மட்டுமே ஆண்களுக்கு திருமண உதவி வழங்கப்படுகிறது. முந்தைய தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006 திட்டத்தில் ஆண்களுக்கு ரூ.3,000/–மும் பெண்களுக்கு ரூ.5,000/–ம் மட்டுமே வழங்கப்பட்டது. 10.9.2011 முதல் 31.07.2015 வரை 19,183 பயனாளிகளுக்கு ரூ.16.07 கோடி வழங்கப்பட்டுள்ளது.

*2. முதியோர் ஓய்வூதியம்*

முதியோர் ஓய்வூதியம் மாதம் ரூ.1,000/– வருவாய் நிர்வாகத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

### *3. உறுப்பினர்களின் தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவிதொகை*

உறுப்பினர்கள் நோய்களால்/ கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள காலங்களில் உறுப்பினர்கள் விவசாய தொழிலுக்கு செல்ல இயலாது. இந்த தற்காலிக உடல் திறனற்ற காலத்தில் வருமானம் இல்லாமல் உறுப்பினரின் குடும்பம் கஷ்டத்திற்கு உள்ளாகும். எனவே, மேற்படி குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்கும் வகையில், விவசாய உறுப்பினர்கள், காசநோய், எச்.ஐ.வி/ எய்ட்ஸ், சிறுநீரகநோய், இடைச்சவ்வூடு மூலம் பிரித்தல் (Dialysis), புற்றுநோய், கை கால் முறிவு மற்றும் நிலைகுலைவு, முதுகு தண்டுவடம் பாதிப்பு, நரம்பு சம்பந்தமான நோய், இதயம் சம்பந்தமான பிரச்சனைகள், பார்வை இழத்தல், கல்லீரல் பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு, மனநிலைபாதிப்பு போன்றவைகளால் பாதிக்கப்பட்டுள்ள தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கு மாதாந்திர உதவித்தொகை **ரூ.1,000/–** வழங்கப்படுகிறது. இந்த புதிய திட்டம் **2012–13** ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் விரிவாக்கப்படுகிறது. **2012–13** முதல் **31.7.2015** வரை **81,265** பயனாளிகளுக்கு **ரூ.44.42** கோடி வழங்கப்பட்டுள்ளது.

### *4. விபத்து நிவாரணம்*

உறுப்பினர் விபத்தில் உயிரிழந்தால், உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு நிதி உதவி மூலம் துயர்துடைக்கும் வகையில், ரூ.1,00,000/– வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகை உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு ஒரு சிறந்த உதவியாக உள்ளது. மேலும், விபத்து காயங்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவிகள் வழங்கப்படுகின்றன:

**அட்டவணை 4.4 விபத்து காயங்களுக்கு உதவி**

| **வ.எண்** | **காயங்களின் விபரம்** | **தொகை (ரூபாயில்)** |
|---|---|---|
| 1 | இரண்டு கை அல்லது இரண்டு கால் இழத்தல் | 1,00,000 |
| 2 | ஒரு கை மற்றும் ஒரு கால் இழத்தல் | |
| 3 | இரண்டு கண்களிலும் பார்வை முழுவதுமாக இழத்தல் | |
| 4 | ஒரு கை அல்லது ஒரு கால் இழத்தல் | 50,000 |
| 5 | பக்கவாதம் | 50,000 |
| 6 | மேலே குறிப்பிட்ட உறுப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை கால்களை இழத்தல் | 20,000 |

**10.9.2011** முதல் **31.07.2015** வரை **13,629** பயனாளிகளுக்கு ரூ.**132.58** கோடி விபத்து நிவாரணமாக (ஈமச்சடங்கு உதவி ரூ.**2,500/–** உட்பட) வழங்கப்பட்டுள்ளது.

*5. இயற்கை மரணத்திற்கான உதவி*

விவசாய உறுப்பினர் இயற்கை மரணமடைந்தால், இறந்த விவசாய உறுப்பினரின் குடும்பத்திற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ரூ.10,000/– வழங்கப்படுகிறது. **10.9.2011** முதல் **31.7.2015** வரை **2,08,864** பயனாளிகளுக்கு ரூ. **259.54** கோடி (ரூ.2,500/– ஈமச்சடங்கு செலவு தொகை உட்பட) வழங்கப்பட்டுள்ளது.

*6. ஈமச்சடங்கு செலவு*

விவசாய உறுப்பினர் இறந்து விட்டால், உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு ஈமச்சடங்கு செலவுக்காக ரூ.2,500/– வழங்கப்படுகிறது.

**ஆ. சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக**

சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கு உதவிகள் கீழ்க்கண்டவாறு:

*1. கல்வி உதவி*

உறுப்பினர்களின் குழந்தைகள் உயர் கல்வியினை தொடரும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

### அட்டவணை 4.5 கல்வி உதவி

| வ. எண் | கல்வி விவரம் | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்குவோர் | |
|---|---|---|---|---|---|
| | | ஆண் (ரூ) | பெண் (ரூ) | ஆண் (ரூ) | பெண் (ரூ) |
| 1 | தொழிற் பயிற்சி நிறுவனம் (ITI) மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி (Polytechnic) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 2 | கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு (Diploma in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 3 | இளங்கலைப் பட்டப்படிப்பு (Bachelor Degree) மற்றும் கவின் கலையில் இளங்கலைப் பட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு (Bachelor Degree in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 1750 | 2250 | 2000 | 2500 |
| 4 | முதுநிலைப் பட்டப்படிப்பு (Post Graduate) மற்றும் கவின் கலை மற்றும் செவிலியர் முதுகலை பட்டப்படிப்பு . (Post Graduate Degree in Fine Arts and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 3250 | 3750 |
| 5 | சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல் வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழிற்கல்வி (Professional Courses) (ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 4250 | 4750 |
| 6 | முதுநிலை தொழிற்கல்வி (Post Graduate Professional Courses) (ஆண்டொன்றுக்கு) | 4250 | 4750 | 6250 | 6750 |

இந்த உதவித்தொகை ஆண்டுதோறும் படிப்பினை முடிக்கும் வரை வழங்கப்படுகிறது. படிப்பு இடைநிறுத்தப்பட்டால் இவ்வுதவித் தொகையும் நிறுத்தப்படும். கல்வி உதவித் தொகையினை பொறுத்தவரை, பயனாளிகள் வேறு எந்த திட்டத்தின் கீழ் கல்வி உதவி பெற்றிருந்தாலும், இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகையை கூடுதலாக பெறலாம். **10.9.2011**

முதல் **31.7.2015** வரை **9,82,332** மாணவ மாணவிகளுக்கு ரூ.**230.82** கோடி வழங்கப்பட்டுள்ளது.

*2. திருமண உதவி*

விவசாய உறுப்பினர்களுக்கு திருமண உதவித் தொகை வழங்குவது போல், விவசாய உறுப்பினர்களைச் சார்ந்துள்ள குழந்தைகளின் திருமணத்திற்காக ஆண்களுக்கு ரூ.**8,000/–**மும் பெண்களுக்கு ரூ.**10,000/–**மும் வழங்கப்படுகிறது. **10.09.2011** முதல் **31.7.2015** வரை **2,10,712** பயனாளிகளுக்கு ரூ.**184.97** கோடி வழங்கப்பட்டுள்ளது.

*3. எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த உறுப்பினரின் அனாதை குழந்தைகளுக்கு மானியம்*

விவசாய உறுப்பினர் எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த பிறகு, சில இனங்களில் அவர்களின் குழந்தைகளும் எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்படுகின்றனர் அல்லது அனாதைகளாகி விடுகின்றனர். இந்த மாதிரியான குழந்தைகளுக்கு தங்களின் படிப்பினை தொடர இயலாமலும் அல்லது அவர்களின் அடிப்படை தேவைகளை சமாளிக்கமுடியாமலும் ஆகிறது. எனவே, இவர்களுக்கு **2013–14**–ஆம் ஆண்டு முதல் மாதம்தோறும் மானியமாக ரூ.**1,000/–** வழங்கப்படுகிறது. எச்.ஐ.வி/ எயிட்ஸ் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான தமிழ்நாடு

டிரஸ்டுக்காக, தமிழ்நாடு எயிட்ஸ் கட்டுப்பாடு சங்கம் (Tamil Nadu AIDS Control Society) தயாரிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின் படி அமைக்கப்பட்டுள்ள மாவட்ட குழு (District Committee) பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கிறது. இந்த உதவி எச்.ஐ.வி/ எயிட்ஸ்–ஆல் பெற்றோரை (ஒருவர்/ இருவரையும்) இழந்த 0–18 வயது வரை உள்ள அனாதைக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. 2013–14 முதல் 31.7.2015 வரை 2,469 பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.1.41 கோடி வழங்கப்பட்டுள்ளது.

*4. ஈமச்சடங்கு செலவு*

விவசாய உறுப்பினர்களுக்கு வழங்குவதுபோல், சார்ந்த உறுப்பினர்கள் இறந்தாலும், ஈமச்சடங்கு செலவு தொகையாக ரூ.2,500/– இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

### 4.5.4 செயலாக்கம் (Performance)

2015–16–ஆம் ஆண்டில், (31.7.2015 முடிய) 1,69,998 பயனாளிகளுக்கு ரூ.96.21 கோடி (முதியோர் ஓய்வூதியம் நீங்கலாக) கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:

### அட்டவணை 4.6 2015–16ல் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உதவிகள் விவரம் (31.7.2015 வரை)

| வ. எண் | உதவி விவரம் | தொகை (கோடியில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கல்வி உதவி | 23.92 | 97,895 |
| 2 | உறுப்பினர்களின் திருமணம் | 3.04 | 3,484 |
| 3 | உறுப்பினர்களின் குழந்தைகள் திருமணம் | 18.82 | 21,697 |
| 4 | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு | 27.39 | 22,754 |
| 5 | விபத்து நிவாரணம் | 14.88 | 1,477 |
| 6 | தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை | 7.80 | 21,465 |
| 7 | எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் அனாதை குழந்தைகளுக்கான மானிய உதவி | 0.35 | 1,226 |
| | **மொத்தம்** | **96.21** | **1,69,998** |


முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011–இன் கீழ் 10.9.2011 முதல் 31.7.2015 வரை வருடாந்திர நிதி மற்றும் பயனாளிகள் (31.3.2014 வரையிலான முதியோர் ஓய்வூதியம் உட்பட) விவரம் பின்வருமாறு :

### அட்டவணை 4.7 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செயல் மற்றும் நிதி சாதனை விவரம்


| வ. எண் | விவரம் | 2011–12 (10.9.2011 முதல் 31.3.2012 வரை) | 2012–13 | 2013–14 | 2014–15 (*) | 2015–16 (31.7.15 வரை) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | நிதி ஒதுக்கீடு (கோடியில்) | 617.20 | 914.20 | 1109.06 | 205.99 | 205.99 | 3052.44 |
| 2 | செலவு (கோடியில்) | 598.87 | 909.73 | 1109.06 | 214.91 | 96.21 | 2928.78 |
| 3 | பயனாளிகளின் எண்ணிக்கை | 6,52,688 | 11,82,649 | 11,68,765 | 3,79,999 | 1,69,998 | 35,54,099 |

(*) 2014–15 முதல் முதியோர் ஓய்வூதியம் வருவாய் நிர்வாகத்துறை மூலம் செயல்படுத்தப்படும் முதியோர் ஓய்வூதியத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

**வரைபடம் 4.1 2011–12 முதல் 2015–16 (31.7.2015 வரை) வருடங்களுக்கான வருடாந்திரச் செலவினைக் காட்டும் விளக்கப்படம்**




**வரைபடம் 4.2 2015–16 (31.7.2015 வரை) ஆண்டில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திட்டவாரியாக பயனாளிகளைக் காட்டும் விளக்கப் படம்**



## 5. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறை, வருவாய்த்துறையின் கீழ் இயங்கி வருகிறது. அரசுக்கு வருவாய் ஈட்டித் தரக்கூடிய பல்வேறு துறைகளில் இத்துறையும் ஒன்றாகும். இத்துறை, நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978 –இன் கீழ் 15.06.1999 வரை கையகப்படுத்தப்பட்ட நகர்ப்புற நிலங்கள் தொடர்பான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966, திருத்தச்சட்டம் 1991–இன்கீழ் 1.07.1981 நாளைய சந்தை மதிப்பின் அடிப்படையில் 24 மாவட்டங்களில் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் நகர்ப்புற நிலவரித் திட்டம் நடைமுறையில் உள்ளது.

### 5.1 பணியாளர் அமைப்பு

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறையின் ஆணையர் அத்துறை ஆணையரகத்தின் தலைவர் ஆவார். ஆணையரகத்தின் உதவி ஆணையர் (தலைமையிடம்) அவருக்கு உதவி புரிகிறார். மைலாப்பூர், தண்டையார்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நகர்ப்புற நிலவரிவிதிப்பு உதவி ஆணையர்கள் எழுவர் உள்ளனர்.

திருச்சி, மதுரை, ஈரோடு மற்றும் திருநெல்வேலி (நிலச்சீர்திருத்தம் மற்றும் நகர்ப்புற நிலவரி) உதவி ஆணையர் அலுவலகங்கள் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண். 249, வருவாய்[நி.சீ.1(2)]துறை, நாள் 7.7.2015– இன்படி திருச்சி மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் இரண்டு நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர்கள் அலுவலகங்களை தோற்றுவித்து, இரண்டு உதவி ஆணையர்கள் பணியிடங்களையும், ஒவ்வோர் அலுவலகத்திற்கும் 17 சார்நிலை அலுவலர்கள் பணியிடங்களை ஏற்படுத்தி, நகர்ப்புற நிலவரி மற்றும் நகர்ப்புற நில உச்சவரம்பு ஆகிய சட்டங்களின் கீழான பணிகளை பிரத்யேகமாக செயல்படுத்தும் பொருட்டு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

## 5.2 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978

ஒரு சில தனிநபர்களின் கைப்பற்றில் விவசாயமல்லாத நிலங்கள் குவிந்து கிடப்பதை சமமாகப் பகிர்ந்தளிக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 24/1978) இயற்றப்பட்டது. இதனை நிறைவேற்றும் நோக்குடன் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும்

திருநெல்வேலி ஆகிய நகர்ப்புற கூட்டுப்பகுதிகளில் காலி நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் **1978**–இன் படி **15.06.1999** வரையிலும் ஒவ்வொரு நகர்ப்புற கூட்டுப் பகுதிகளிலும் உள்ள தனி நபர், குடும்பம் மற்றும் தொழில் நிறுவனம் ஆகியவற்றிற்குத் தகுதியான உச்சவரம்பு விவரம் கீழ்வருமாறு:

**அட்டவணை–5.1 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 இன்படி உச்சவரம்பு**

| வ.எண் | நகர்ப்புற கூட்டுப்பகுதி | தனிநபர் | குடும்பம் | தொழில் நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | ச.மீ | ச.மீ | ச.மீ |
| 1 | சென்னை | 500 | 2000 | 2000 |
| 2 | மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி (ம) சேலம் | 1500 | 3000 | 3000 |
| 3 | திருநெல்வேலி | 2000 | 4000 | 4000 |

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், **1978** ஆனது தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவு சட்டம், **1999** (தமிழ்நாடு சட்டம் **20/99**)–இன் வாயிலாக **16.6.1999** முதல் நீக்கறவு செய்யப்பட்டது. முதன்மைச் சட்டத்தின் கீழ் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டு, நீக்கறவு சட்டம் அமலுக்கு வந்த

தேதியில் கையகப்படுத்தப்பட்டு அரசு வசம் உள்ள நிலங்களுக்கு, இந்நீக்கறவு சட்டம் பொருந்தாது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978–இன் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

**அட்டவணை–5.2 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 இன்படி கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் விவரம்**

| வ. எண் | விவரம் | சதுர மீட்டரில் |
|---|---|---|
| 1 | கையகப்படுத்தப்பட்ட மொத்த பரப்பு (சுவாதீனம் பெறப்பட்ட விவரத்தின் படி) | **1,89,79,446** |
| 2 | அரசுத்துறை மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு செய்த பரப்பு | 43,70,050 |
| 3 | நீதிமன்ற வழக்குகளில் உள்ள பரப்பு | 28,61,579 |
| 4 | அறியாமல் கிரயம் பெற்றவர்களின் கைப்பற்றில் உள்ள பரப்பு | 23,95,785 |
| 5 | ஆக்கிரமிப்பில் உள்ள பரப்பு (நில உரிமையாளர்கள் மற்றும் உரிமையற்ற ஏனையோர்) | 84,19,683 |
| 6 | ஆக்கிரமிப்பு இல்லாத காலிப்பரப்பளவு நிலம் | 9,32,349 |

## 5.3 அறியாமல் கிரயம் பெற்றவர்களின் நிலங்களை வரன்முறை செய்தல்

கையகப்படுத்தப்பட்ட அரசு மிகை வெற்று நிலங்களை, நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தைப் பற்றிய விவரம் அறியாது 1½ மனை வரை குடியிருப்பு நோக்கத்திற்காக வாங்கியிருப்பின்,

அதனை அரசு நிர்ணயித்துள்ள நிலமதிப்பினை செலுத்தி வரன்முறை செய்துக் கொள்ள அரசு ஆணை (நிலை) எண். **649**, வருவாய்த்துறை, நாள் **29.07.1998** இன்படி அனுமதிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக **1½** மனைக்கு மேல் கிரயம் பெற்ற நிலங்களையும், குடியிருப்பு நோக்கம் அல்லாது மற்ற இதர பயன்பாடுகளுக்கும் கிரயம் பெற்றிருப்பின் இரு மடங்கு, மும்மடங்கு நிலமதிப்புத் தொகை செலுத்தி வரன்முறைப்படுத்திக் கொள்ள அரசு ஆணை (நிலை) எண். **565**, வருவாய்த்துறை, நாள் **26.09.2008**–இன்படி அனுமதிக்கப்பட்டது.

### 5.4 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966 திருத்தச் சட்டம், 1991

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், **01.07.1963**–இல் விவசாயம் அல்லாத நகர்ப்புற நிலங்களுக்கு வரிவிதிப்பு மற்றும் ஒரு சில நில உடமையாளர் வசம் குவிந்து கிடப்பதைத் தடுக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டம் முதலில் சென்னை நகருக்கு மட்டுமே அமலாக்கப்பட்டது. பின்னர் திருச்சி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்கள் மற்றும் சென்னை புறநகர் பகுதிகள், திருநெல்வேலி மாநகராட்சி பகுதி மற்றும் **23** நகராட்சிகளாகிய காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை,

புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், நாமக்கல், மேட்டூர், ஈரோடு, திண்டுக்கல், பழனி, கொடைக்கானல், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருப்பூர், தூத்துக்குடி, இராஜபாளையம், உதகமண்டலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் அமலாக்கப்பட்டது.

மேற்படி வட்டங்களுள் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் **1.07.1981** ஆம் நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு **1.07.1991** முதல் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுகிறது.

**அட்டவணை – 5.3 நகர்ப்புற நில வரிவிதிப்பு விவரங்கள்**

| வரிசை எண் | சென்னை மற்றும் ஏனைய நகர்ப்பகுதிகள் | | சென்னை புறநகர்ப்பகுதியில் உள்ள அனைத்து நிலங்கள் | |
|---|---|---|---|---|
| 1 | 2 மனைகளுக்குள் | வரி இல்லை | 3 மனைகளுக்குள் | வரி இல்லை |
| 2 | 2 மனைகளுக்கு மேல் 5 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 3 மனைகளுக்கு மேல் 7 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3 | 5 மனைகளுக்கு மேல் 10 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 7 மனைகளுக்கு மேல் 10 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |
| 4 | 10 மனைகளுக்கு மேல் 20 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 10 மனைகளுக்கு மேல் 20 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5 | 20 மனைகளுக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 20 மனைகளுக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |

**அட்டவணை – 5.4 மாவட்டவாரியாக வரிவிதிப்புதாரர்களின் எண்ணிக்கை மற்றும் கேட்பு தொகை – 30.06.2015 அன்றைய நாளில்**

(ரூ.இலட்சத்தில்)

| வரிசை எண் | மாவட்டம் | வரி விதிப்புதாரர்களின் எண்ணிக்கை | ஒரு வருடத்திற்கான கேட்பு தொகை |
|---|---|---|---|
| 1 | சென்னை | 24212 | 666.51 |
| 2 | கோயம்புத்தூர் | 17369 | 173.03 |
| 3 | கடலூர் | 2927 | 6.01 |
| 4 | திண்டுக்கல் | 6110 | 36.51 |
| 5 | ஈரோடு | 2229 | 25.82 |
| 6 | காஞ்சிபுரம் | 28614 | 381.92 |
| 7 | கன்னியாகுமரி | 8166 | 17.40 |
| 8 | கரூர் | 2221 | 4.85 |
| 9 | மதுரை | 6909 | 56.99 |
| 10 | நாகப்பட்டினம் | 4240 | 3.82 |
| 11 | நாமக்கல் | 2265 | 6.35 |
| 12 | புதுக்கோட்டை | 1859 | 3.19 |
| 13 | சேலம் | 4478 | 45.88 |
| 14 | சிவகங்கை | 5925 | 5.94 |
| 15 | தஞ்சாவூர் | 4524 | 16.23 |
| 16 | திருப்பூர் | 4027 | 25.86 |
| 17 | திருவள்ளூர் | 43791 | 367.47 |
| 18 | திருநெல்வேலி | 4975 | 13.04 |
| 19 | திருச்சி | 5754 | 25.30 |
| 20 | தூத்துக்குடி | 3324 | 17.57 |
| 21 | நீலகிரி | 1822 | 13.05 |
| 22 | வேலூர் | 1716 | 14.54 |
| 23 | விழுப்புரம் | 1304 | 5.88 |
| 24 | விருதுநகர் | 2856 | 6.86 |
| | **மொத்தம்** | 191617 | 1940.02 |

நகர்ப்புற நிலவரிச்சட்டப் பிரிவு **29–**இன் கீழ் வரி விதிப்பினின்றும் கீழ்க்கண்ட வகையான நிலங்கள் விலக்கு பெறுகின்றன.

(i) மத்திய மாநில அரசு நிலங்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற நிலங்கள்.

(ii) பொது வழிபாட்டுக்கான நிலங்கள்.

(iii) மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை உபயோகத்திற்கான நிலங்கள்.

(iv) மயானபூமி நிலங்கள்.

(v) சாலைகளாகப் பயன்படும் நிலங்கள்.

(vi) தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்.

(vii) பொது பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகம் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

(viii) ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் அமையப் பெற்ற நிலங்கள்.

தர்ம, சமய மற்றும் பெருங்கொடை வழங்கும் நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அந்நிறுவனங்களுக்கு இன்னல் இருப்பின், பிரிவு **27(1)**–இன் கீழ் அரசு வரிவிலக்கு அளிக்கிறது.

கீழ்க்கண்ட அமைப்புகளுக்கு அரசு வரிச்சலுகைகளை அளித்துள்ளது.

(அ) சிறுதொழில் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 விழுக்காடு, மற்ற தொழிற்சாலைகளுக்கு 10 விழுக்காடு.

(ஆ) அனைத்து சங்கீத நாடக சபைகளுக்கு 50 விழுக்காடு.

(இ) திரையரங்குகளுக்கு 10 விழுக்காடு.

(ஈ) குடிசைப்பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு 100 விழுக்காடு மற்றும்

(உ) நகர்ப்புற நிலத்தில் கட்டடம் இருந்து, அது நிலத்தின் உரிமையாளரால் குடியிருப்புக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால், நகர்ப்புற நிலவரியில் 50 விழுக்காடு.

நகர்ப்புற நிலவரி மதிப்பீடு மற்றும் வரி விதிப்பை எதிர்த்து தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விரைவாகத் தீர்வு செய்யவும், மக்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கவும் அந்தந்த மாவட்ட வருவாய் அலுவலர்களையே தீர்ப்பாய அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது.

## 5.5 நகர்ப்புற நிலவரி சட்டத்தின் கீழ் சீராய்வு அதிகாரம்

நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் வரிவிதிப்பு உத்தரவுகளின்பேரில் அதிருப்தி ஏதேனும் இருப்பின், சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள்


அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியிடம் சீராய்வு மனு தாக்கல் செய்யலாம். தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி சட்டம் **1966,** திருத்தச்சட்டம் **1991**–இன் பிரிவு **30(1)**–இன் கீழ் மேற்கண்ட அதிகாரிக்கு சீராய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஓர் அறிவிக்கையின் மூலம் நேரடியாக ஆஜராக வாய்ப்பு அளிக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியால் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

## 6. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம்

நில அளவை மற்றும் நிலவரித்திட்டத்துறை 1859–ஆம் ஆண்டில், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் நில அளவை மேற்கொள்வதும், நில ஆவணங்களை உருவாக்குவதும் மற்றும் அதன் பின்னர் ஏற்படும் நிலவியல் வகையான மாற்றங்களுக்கு ஏற்ப அவற்றை நிகழ்நிலைப்படுத்தி நில ஆவணங்களை பராமரிப்பதும் இத்துறையின் முக்கிய பணிகளாகும்.

சென்னை, சேப்பாக்கத்திலுள்ள ‘‘நிலஅளவை இல்லத்தில்’’ நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககம் அமைந்துள்ளது. இவ்வியக்ககத்தில் நில அளவைப்பிரிவு மற்றும் நிலவரித்திட்டப்பிரிவு ஆகிய இரு பிரிவுகள் இயங்கி வருகின்றன. நில அளவை மற்றும் நிலவரித்திட்டம் தொடர்புடைய அனைத்துப் பணிகளும் இயக்ககத்தின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. மாநில அளவிலான நில அளவை வரைபடம் தயாரித்தலை செயல்படுத்தி வெளியிடும் மத்திய நில அளவை அலுவலகமும் இவ்வியக்ககத்தில்தான் அமைந்துள்ளது. நிலஅளவை பதிவேடுகள் துறையின் உதவி இயக்குநர்களின் தலைமையின் கீழ் செயல்படும் மாவட்ட நிலஅளவை அலுவலகங்கள், ஒவ்வொரு மாவட்ட

தலைமையிடத்திலும் அமைந்துள்ளன. நிலஅளவைத் திட்டங்களை அடிப்படை நிலையிலிருந்து செயல்படுத்துவது இவற்றின் பொறுப்பாகும். ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் உள்ள நிலஅளவைப் பிரிவுகள், நில உரிமை மற்றும் நிலவகைப்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நில ஆவணங்களை பராமரிப்பதை பொறுப்பாகக் கொண்டு செயல்பட்டுவருகின்றன.



## 6.1 நவீன மறு நில அளவை

நிலஅளவை சங்கிலிகள், நேர்கோணக்கட்டைகள் மற்றும் கோணமாணிகள் ஆகியவற்றைக் கொண்டு 1850–களில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நில அளவை துவங்கப்பட்டது. அக்காலக்கட்டத்தில், முக்கோண முறையை பயன்படுத்தி நாடு முழுமையும் நில அளவை செய்யப்பட்டு, நில ஆவணங்கள் உருவாக்கப்பட்டன. நாடு சுதந்திரமடைந்த பிறகு தமிழ்நாட்டில் 1960–களில் சுமார் 30 ஆண்டுகாலத்திற்கு பல கட்டங்களாக, மறுநிலஅளவை மேற்கொள்ளப்பட்டது. 1980–களில், நில உரிமை ஆவணங்களை நிகழ்நிலைப்படுத்தும் பொருட்டு, நில உடமைப்பதிவு மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

நவீன மறு நிலஅளவை முறையை அறிமுகப்படுத்துவதானது, மில்லிமீட்டர் அளவிற்கு துல்லியமான நில ஆவணங்களை உருவாக்குவதை உறுதி செய்வதுடன், நிலங்கள் மற்றும் அவற்றின் வகைப்பாடுகள் குறித்த விவரங்களடங்கிய இலக்கமுறை தரவுத்தளத்தை (Digital Data Base) உருவாக்கிட ஏதுவாகும். இதனால், மக்கள் தமது நிலங்களின் விவரங்களை கணினி வாயிலாகவே இணையதளம் (Internet) மூலம் முழுமையாக அறிந்து கொள்ள வகை செய்வதுடன், நிர்வாக அலுவலர்கள் நிலங்களின்

பயன்பாடுகளை எளிதாக திட்டமிடவும் பயனுள்ளதாக அமையும். மேலும், இலக்கமுறை தரவு தளத்தில் (Digital Data Base) ஆவணங்கள் பராமரிக்கப்படுவதால் முறைகேடான பரிவர்த்தனைகள் தடுக்கப்படுவதுடன், இணையவழியில் அரசு நிலங்கள் கண்காணித்து பாதுகாக்கப்படும்.

பூகோள நிலைக்கலன் (ஜி.பி.எஸ்) மற்றும் மின்னணு நிலஅளவைக் கருவி (இ.டி.எஸ்) ஆகியவற்றை உபயோகித்து பெரம்பலூர் நகரம் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட 10 நகராட்சிப் பகுதிகளில் நவீன நிலஅளவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 6 மாநகராட்சிகளின் விரிவாக்கப்பகுதிகளிலும் நவீன நில அளவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் சட்டமன்றத்தில் 08.08.2014 அன்று அறிவிக்கப்பட்டதற்கு ஏற்ப நிலஇயல் நிலைக்கலன் மற்றும் மின்னணு நில அளவைக் கருவிகளைக் கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அகஸ்தீஸ்வரம் முன்மாதிரி வட்டமாக தேர்வு செய்யப்பட்டு மறுநிலஅளவைப் பணி துவக்கப்பட்டுள்ளது. இதன்பொருட்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஊத்தங்கரை வட்டத்தில் துறையால் ஒரு ‘முன்னோடி ஆய்வு’ மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு மாதகாலத்திற்குள் இந்த முன்னோடி ஆய்வு பணி வெற்றிகரமாக முடிவடைந்தவுடன், மேற்குறிப்பிட்ட நவீன

தொழில்நுட்ப மறுநிலஅளவைப் பணியினை விரிவாக்கம் செய்வது குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 6.2 நில ஆவணங்களை கணினிப்படுத்துதல்


**(1)** எழுத்துவடிவில் உள்ளவை **(2)** வரைபட வடிவில் உள்ளவை என நில ஆவணங்கள் இரு வகையாக அமைந்திருக்கும்.

தமிழ்நாட்டில் எழுத்து வடிவில் அமைந்துள்ள நில ஆவணங்கள் மூன்று வகைப்படும். அவையாவன: கிராமப்புற நில ஆவணங்கள், நகர்ப்புற நில ஆவணங்கள் மற்றும் நத்தம் நில ஆவணங்கள். இவற்றின் கலங்களின் அமைப்பு வேறுபட்டவையென்பதால், முதற்கட்டமாக, கிராமப்புற நில ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டன. இவ்வாறு கணினிப்படுத்தப்பட்ட கிராமப்புற நில ஆவணங்கள் வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள சேவைக் கணினிகளில் ‘தமிழ் நிலம்’ எனும் மென்பொருளின் வாயிலாக தனித்தியங்கும் செயலாக்கத்திற்கு கொண்டு வரப்பட்டு கைப்பிரதியிலான பட்டாக்களை வழங்குதல் **2003–**ஆம் ஆண்டிலேயே தடை செய்யப்பட்டு, கணினியில் உருவாக்கப்பட்ட பட்டாக்களே கிராமப்புறங்களைப் பொறுத்தமட்டில் வழங்கப்பட்டு வருகின்றன.

### 6.2.1 நகர்ப்புற நில ஆவணங்களை கணினிப்படுத்துதல்

சென்னை மாவட்டத்திலுள்ள நகர்ப்புற நில ஆவணங்களை கணினிப்படுத்தும் பணி நிறைவுபெற்றுள்ளது. ஏனைய மாவட்டங்களில் இப்பணி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் நடைபெறுகிறது.

சென்னையில் மொத்தமுள்ள **3.76** இலட்சம் நகர்ப்புற ஆவணங்கள் முழுமையாக கணினிப்படுத்தப்பட்டுள்ளன. சென்னை தவிர இதர மாவட்டங்களில் உள்ள **33.81** இலட்சம் நகர்ப்புற நில ஆவணங்களில் இதுவரை **33.09** இலட்சம் ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. நகர்ப்புற நில ஆவணங்களை கணினிப்படுத்தும் பணி **24** மாவட்டங்களில் நிறைவு பெற்றுள்ளது. மீதமுள்ள **7** மாவட்டங்களில் விரைவில் நிறைவு பெறவுள்ளது. **2015–16–**ஆம் நிதியாண்டில் நகர்ப்புற நில ஆவணங்களை கணினிப்படுத்தும் பணி நிறைவுபெற்றவுடன் 'இணையம் சார்ந்த தமிழ்நிலம்' (Web Based TamilNilam) மென்பொருள் வாயிலாக அவை இணையவழிச் சேவையாக பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.



கடலூர் மாவட்ட நில அளவை அலுவலகத்தில் கணினியில்
பதிவு செய்யும் பணி நடைபெறும் காட்சி

### 6.2.2 நத்தம் நில ஆவணங்களை கணினிப்படுத்துதல்

நத்தம் நில ஆவணத் தரவுகளை கணினியில் பதிவு செய்யும் பணி கடந்த ஆண்டு துவக்கப்பட்டது. மொத்தமுள்ள 1.45 கோடி நத்தம் நில ஆவணங்களில் 1.38 கோடி ஆவணங்கள் இதுவரை கணினிப்படுத்தப்பட்டுள்ளன. இப்பணி 20 மாவட்டங்களில் நிறைவு பெற்றுள்ளது. எஞ்சியுள்ள 11 மாவட்டங்களில் (சென்னை தவிர) இப்பணி விரைவில் நிறைவடையும். 2015–16–ஆம் நிதியாண்டில் நத்தம் நில ஆவணங்களை கணினிபடுத்தும் பணி நிறைவுபெற்றதும்

‘அ’ பதிவேடு மற்றும் சிட்டாவுடன் “இணையம் சார்ந்த தமிழ்நிலம்’’ மென்பொருள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு இணையவழி சேவையாக பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.

### 6.2.3 புலப்படங்களை கணினிப்படுத்துதல்

புலப்படம் என்பது, ஒரு நிலஅளவைப் புலத்தின் மூலம் நிலத்தின் எல்லைகள் குறித்த அளவீடுகளையும், அப்புலத்தின் அமைவிடத்தையும் அதனை ஒட்டியுள்ள புலங்களின் அடிப்படையில் தலவிளக்கிகளுடன் கூடிய கணித முறையில் வரைவு செய்யப்பட்ட வரைபடமாகும். இதனைக் கொண்டு நிலத்தின் எல்லைகளை நிர்ணயம் செய்யவும், நில அளவை உட்பிரிவுகளை எளிதாக அளவிடவும், அடையாளங்காணவும் இயலும். மாநிலத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் சுமார் **53** இலட்சம் புலப்படங்கள் உள்ளன. இவற்றை கணினிப்படுத்தும் பொருட்டு, ‘கொலாப்லேண்ட்’ எனும் மென்பொருளைக் கொண்டு புலப்படங்களை வரைவு செய்து கணினிப்படுத்தும் பணி, நில ஆவணங்களை கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ், சென்னை தவிர அனைத்து மாவட்ட நில அளவை அலுவலகங்களிலும் துவக்கப்பட்டது.

‘கொலாப்லேண்ட்’ மென்பொருளில் புலங்களின் அளவுகளைக் கொண்டு, அதன் தரவுகளை பதிவு செய்து புலப்படம் தயார் செய்யும் பணி இத்துறை மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மொத்தமுள்ள **53** இலட்சம் புலப்படங்களில் **29.11** இலட்சம் புலப்படங்கள் இதுவரை கணினிப்படுத்தப்பட்டுள்ளன. **2015–16–**ஆம் நிதியாண்டில் கணினிமூலம் உருவாக்கப்பட்டுள்ள புலப்படங்களை பட்டாவுடன் வழங்கும் பணி முன்னோடியாக பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள தனித்து இயங்கும் சேவைக் கணினி மூலம் ஏற்கெனவே துவக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் ஒவ்வொரு வட்டத்திலுள்ள புலப்படங்கள் அனைத்தும் கணினிப்படுத்தப்பட்டவுடன், அவற்றை ஏற்கெனவே கணினிப்படுத்தப்பட்டுள்ள ‘அ’ பதிவேடு மற்றும் சிட்டாவுடன் இணையம் சார்ந்த மென்பொருள் வாயிலாக ஒருங்கிணைத்து, பட்டாவுடன் புலப்பட நகலையும் பொதுமக்கள் பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்படும். இத்துறையின் பயன்பாட்டிற்காக, தனித்தனியான புலப்படங்களை ஒன்றுடன் ஒன்றாக இணைத்து கிராம வரைபடங்களை உருவாக்கிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 6.2.4 நில ஆவணங்களுக்கான இணையம் சார்ந்த பட்டா மாறுதல் மென்பொருள் (Online Patta transfer)

தற்போது, ஒவ்வொரு வட்டத்திலுள்ள நில ஆவணங்கள் சென்னையிலுள்ள இணையவழிச் சேவைக்கான கணினிக்கு பதிவேற்றம் செய்யப்பட்டு, நிகழ்நிலை நில ஆவணங்களை (updated land records) நிலஉடமையாளர்களுக்கு வழங்கும் நோக்கில், இணையம் சார்ந்த மென்பொருள் உருவாக்கப்பட்டு, சென்னையில் உள்ள மாநில தரவு மையத்திலிருந்து (State Data Centre) செயலாக்கம் செய்யப்படுகிறது. இணையவழி செயலாக்கத்திற்கு முன்னர் 'தமிழ்நிலம்' நில ஆவண தரவில் உள்ள உள்ளீட்டுப் பிழைகளை நீக்கிடும் பொருட்டு, ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இணையம் மூலம் பட்டா மாற்றம் செய்யும் நடைமுறை பெரம்பலூர் மற்றும் ஸ்ரீரங்கம் வட்டங்களில் முன்னோடித் திட்டமாக ஏற்கெனவே துவக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மேலும் 15 மாவட்டங்களில் உள்ள 15 வட்டங்களில் சோதனை முறையில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டிற்குள், மாநிலத்திலுள்ள எஞ்சிய அனைத்து வட்டங்களுக்கும் படிப்படியாக விரிவாக்கம் செய்யப்படும்.

## (1) பொதுமக்களுக்கான பயன்கள்

- பொதுமக்கள் அருகாமையில் அமைந்துள்ள பொதுச்சேவை மையத்தின் மூலம் இணையவழியில் பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.
- தமது விண்ணப்பத்தின்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தையும் அதன் தற்போதைய நிலை குறித்தும் இணையம் மூலம் அறிந்து கொள்ள இயலும்.
- விண்ணப்பம் பெறப்படும்போதும் (ஒப்புதல்), குறுவட்ட அளவர் புல ஆய்வுக்கு நாள் நிர்ணயம் செய்யும் போதும், வட்டாட்சியர்/ துணை வட்டாட்சியரால் பட்டாவிற்கான விண்ணப்பத்தினை அங்கீகாரம்/ நிராகரிப்பு செய்யப்படும் போதும் விண்ணப்பதாரர்களின் கைப்பேசிக்கு குறுந்தகவல் அளிக்கப்படும்.
- இலக்க முறையில் ஒப்பமிடப்பட்ட பட்டாவை இணையம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- பொதுமக்கள் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியம் தவிர்க்கப்படுகிறது.
- மின்சேவை வாயிலாக இச்சேவைகள் அனைத்தும் மக்களை சென்றடைவது உறுதி செய்யப்படும்.

**(2) அலுவலர்களுக்கான பயன்கள்**

- அலுவலர்களின் பணிகள் கணினிப்படுத்தப் படுவதால், பணிப்பளு வெகுவாக குறைக்கப் படுவதுடன், தமது வழக்கமான பணிகளை எளிதாக செய்யலாம்.
- புதிய பொலிவுடன் கூடிய தொழில்நுட்பச் சூழலில் அலுவலர்கள் பணிபுரிய இயலும்.
- உயர் அலுவலர்கள் பணியின் நிலையை இணையம் வாயிலாக நெருக்கமாக கண்காணிக்க இயலும்.
- நிலுவையிலுள்ள மனுக்களை அவர்கள் ஆய்வு செய்து, தேவையான அறிவுரைகளை வழங்க இயலும்.

**(3) இணையம் சார்ந்த மென்பொருளின் அமலாக்கத்தின் தற்போதைய நிலை**

(i)அனைத்து வட்டங்களுக்கும் உரிய ‘அ’ பதிவேடு மற்றும் சிட்டா ஆகியவை ஏற்கெனவே கணினிப்படுத்தப்பட்டுள்ளன.

(ii)கணினிப்படுத்தப்பட்ட நில ஆவணங்களில் ஏற்பட்டுள்ள பிழைகளை நீக்கும் பொருட்டும், அவற்றை நிகழ்நிலைப்படுத்தும் (updation) பொருட்டும், ‘நில ஆவணங்களை சரிபார்த்து, நிகழ்நிலைப்படுத்தும் சிறப்பு

நடவடிக்கை மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்களின் நேரடிப் பார்வையில் அனைத்து வட்டங்களிலும் (சென்னையில் உள்ளவை தவிர) மேற்கொள்ளப்பட்டு இன்று ‘‘பிழைகளில்லா நில ஆவணங்கள்’’ என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

(iii)கிராமப்புற நில ஆவணங்களை இணைய வழியில் வெளியிடுவதற்காக மாநில தரவுமையத்தில் இரு சேவைக்கணினிகள் நிறுவப்பட்டுள்ளன.

**(4) கடைபிடிக்கப்படும் செயல்முறைகள்**

(i) இம்மென்பொருளை இரண்டு கட்டங்களாக செயலாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒரு வட்டத்திலும் இரண்டாம் கட்டத்தில் எஞ்சிய வட்டங்களிலும் இம்மென்பொருள் செயலாக்கம் செய்யப்படும்.

(ii) வட்டங்களில் அனைத்து அடிப்படை வசதிகளும் அதாவது, பொதுச் சேவை மையங்கள், வலையமைப்புத் தொடர்பு, கணினிகள்/ மடிக்கணினிகள் போன்றவை உள்ளனவா என உறுதி செய்து கொள்ள அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

(iii) வருவாய் மற்றும் நிலஅளவைத் துறைகளின் பணியாளர்களுக்கு **3** நிலைகளில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அவையாவன: **(1)** மாவட்ட வருவாய் அலுவலர்கள், துணை ஆட்சியர்கள்/ சார் ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், நிலஅளவை துணை ஆய்வாளர்கள், மாவட்ட தகவல் அலுவலர்கள் ஆகியோருக்கு மாநில அளவிலான பயிற்சி **(2)** வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், நில அளவைப் பணியாளர்கள் ஆகியோருக்கு மாவட்ட அளவில், மாவட்ட தகவல் அலுவலர்கள் மூலமாகவும், **(3)** வட்ட அளவில் மீண்டும் ஒரு பயிற்சி கிராம நிர்வாக அலுவலர்கள், மண்டலத்துணை வட்டாட்சியர்கள், நில ஆவண வரைவாளர்கள், நில அளவர்கள் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(5) நகர்ப்புற நில ஆவணங்களுக்குரிய இணையம் சார்ந்த மென்பொருளின் அமலாக்கத்தின் தற்போதைய நிலை**

(i)இணையம் சார்ந்த மென்பொருளை மாம்பலம் மற்றும் எழும்பூர் ஆகிய இரண்டு வட்டங்களில் முன்னோடியாக செயல்படுத்தவும், பின்னர், அதனை

சென்னை மாவட்டத்திலுள்ள எஞ்சியுள்ள வட்டங்களுக்கும் மற்றும் இதர மாவட்டங்களிலுள்ள நகர்புற பகுதிகளுக்கும் படிப்படியாக விரிவாக்கம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ii) நகர்ப்புற நில ஆவணங்களை இணையத்தில் வெளியிடும் பொருட்டு, ஒரு சேவைக்கணினி பிரத்யேகமாக மாநில தரவுத்தளத்தில் நிறுவப்பட்டுள்ளது.

(iii)மேற்குறிப்பிடப்பட்ட திட்டப்படி, மாம்பலம் மற்றும் எழும்பூர் வட்டங்களில் இணையம் சார்ந்த மென்பொருளின் முன்னோடிச் செயலாக்கம் துவக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## 6.3 தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம்

‘நில ஆவணங்களை கணினிமயமாக்கும் திட்டம்’ மற்றும் ‘வருவாய் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நில ஆவணங்களை மேம்படுத்துதல் திட்டம்’ ஆகியவற்றை ஒருங்கிணைத்து ‘தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம்’ இந்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின்கீழ் இயங்கும் நில ஆதாரங்களுக்கான துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு தனது பங்களிப்பான நிதி ஆதாரங்களையும் வழங்கி, பொதுமக்களின் சேவையை குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் விதமாக நில மேலாண்மையை நவீனப்படுத்துதல், நிலம் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் மீதான தாவாக்களை குறைத்தல், நில ஆவணங்களை பராமரித்தலில் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல், உத்திரவாதத்துடன் கூடிய உரிமை ஆவணத்தை வழங்கும் நிலையை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மேற்படி திட்டத்தின் கீழ், இவ்வரசால் இத்துறையின் மூலம் மாநிலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்கள்கீழ் வருமாறு:

### 6.3.1 நில ஆவண மேலாண்மை மையங்கள் (LRMCs)

நில ஆவண மேலாண்மை மையங்கள்/ நவீன ஆவண காப்பறை ஆகியவை தேவையான உள்கட்டமைப்புகளுடன் அனைத்து வட்டங்களிலும் பொது சேவை மையமாக செயல்பட உருவாக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு வருவாய்த் துறையின் அனைத்து சேவைகளும் ஒற்றைச் சாளர முறையில் நில ஆவண மேலாண்மை மையங்கள் வாயிலாக வழங்கப்படும்.

**நில ஆவண மேலாண்மை மையங்கள் உருவாக்க நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ள விவரம்**

| வ.எண். | மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆண்டு | மொத்த தொகை ஒதுக்கீடு 50:50 மத்திய நிதி மற்றும் மாநில நிதி (ரூ. இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட வட்டங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2011–2012 | 525.00 | 21 |
| 2 | 2013–2014 | 855.00 | 57 |
| 3 | 2014–2015 | 1140.00 | 76 |
| | மொத்தம் | **2520.00** | **154** |

## (1) தற்போதைய நிலை

(i) கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் இதுவரை **15** நில ஆவண மேலாண்மை மையங்கள் நிறுவப்பட்டு செயலாக்கத்திற்கு வந்துள்ளன.

(ii) **24** மாவட்டங்களில் உள்ள **63** வட்டங்களில் நில ஆவண மேலாண்மை மையங்களுக்கான பணிகள் தற்போது நிறைவு பெற்றுள்ளதால், விரைவில் செயலாக்கத்திற்கு கொண்டு வரப்படவுள்ளன.




காஞ்சிபுரம் மாவட்டத்தில் உத்திரமேரூர் வட்டத்தில் உள்ள நில ஆவண மோலாண்மை மையங்கள்

(iii) **2015–16–**ஆம் நிதியாண்டில் **76** வட்டங்களில் நில ஆவண மேலாண்மை மையங்கள் உருவாக்கப்படவுள்ளன.

(iv) வட்ட அலுவலகங்களில் உருவாக்கப்படும் நில ஆவண மேலாண்மை மையங்களில் பழைய ஆவணங்களை டிஜிட்டல் முறையில் பாதுகாக்க தகுந்த உள்கட்டமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

(v) அனைத்து பழைய ஆவணங்களையும் ஒளிபிம்பம் செய்து டிஜிட்டல் முறையில் அகரவரிசையில் எளிதாக எடுக்கும் வகையில் பாதுகாக்கப்படும்.



### 6.3.2 வட்ட பதிவு மையங்கள்/ புதிய வட்ட அலுவலகங்களுக்கு கணினி வழங்குதல்

**2011–12** முதல் **2013–14** வரை புதிதாக உருவாக்கப்பட்ட அனைத்து வட்டங்களுக்கும், வருவாய் கோட்டங்களுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சமீபத்தில்

உருவாக்கப்பட்டுள்ள மற்றும் உருவாக்கப்படவுள்ள வட்டங்கள் மற்றும் வருவாய் கோட்டங்களுக்கும் கணினிகள் விரைவில் வழங்கப்படும்.

### 6.3.3 தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்ட பிரிவு (NLRMP Cell)

தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்ட பிரிவு ஒரத்தநாடு நில அளவைப் பயிற்சி பள்ளியில் நவீன நில அளவை மற்றும் டிஜிட்டல் வரைபடங்கள் ஆகியவை பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க உருவாக்கப்பட்டுள்ளது.

(i) மின்னணு டோட்டல் ஸ்டேஷன்கள் (ETS), லேசர் செட் அச்சுப்பொறி, ஜி.பி.எஸ்.(GPS), ஆட்டோ கேட் (Auto Cad) மென்பொருள், மரச்சாமான்கள், எழுதுபொருள்கள் மற்றும் நூலக புத்தகங்கள், பயிற்சிக்கு தேவையான பொருட்கள் மற்றும் 10 KVA ஜெனரேட்டர் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

(ii) புதிய ஆவண அறை கட்டப்பட்டுள்ளது. புல ஆய்வுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல், வாகன ஓட்டுநர் நியமித்தல், உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல், ஒப்பந்த முறையில் ஆசிரியர் நியமனம்

மற்றும் பயிற்சியாளர்களுக்கு உணவகம் மற்றும் தங்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

**6.4 நில அளவைத் துறையை வலுப்படுத்துதல்**

**(1)** கணினிப்படுத்தப்பட்ட புலப்படங்களை (FMB Sketch) பயன்பாட்டிற்கு கொண்டு வர ஏதுவாகவும், இணைய வழி (Online) நில ஆவண பராமரிப்பிற்கு உபயோகமாகும் வகையிலும், **600** குறுவட்ட அளவர்களுக்கு (Firka Surveyors) மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

**(2)** பட்டா மாற்றம் தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொள்ள ஏதுவாக குறுவட்ட அளவர்கள் தமது கைப்பேசியில் பொருத்தி, குறிப்பிட்ட எண்களுக்கு மட்டும் பேசக்கூடிய வகையில் (BSNL-CUG) திட்டத்தின் கீழ் குறுவட்ட அளவர்களுக்கும் (Firka Surveyors) ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் மற்றும் சார் ஆய்வாளர்கள் ஆகியோருக்கு **1600** சிம்கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

**(3)** குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்

**2013–14–**ஆம் நிதியாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில்

அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி 100 குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்கள் தங்கள் வசிக்கும் குறுவட்டங்களிலேயே குறுவட்ட அளவர்களை எளிதாகத் தொடர்பு கொள்ள இயலும். இத்திட்டம் பொதுமக்களுக்கு மட்டுமல்லாது குறுவட்ட அளவர்கள் தங்களின் புல ஆய்வு சம்பந்தமான பணிகளை குறுவட்டத்திலேயே இருந்து மேற்கொள்ளவும் பெரிதும் உதவிகரமாக இருக்கும்.





கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பம் குறுவட்டத்தின் குறுவட்ட அளவருக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு

(4) இணைய வழி பட்டா மாறுதல் மற்றும் திட்டப்பணிகளை ஆய்வு செய்யும் பொருட்டு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககத்திற்கென்று தனியாக காணொளி காட்சி (Video Conferencing) அமைப்பு ஏற்படுத்தப்பட்டு மாவட்ட அளவிலான உதவி இயக்குநர்கள் மற்றும் நில அளவைப் பணியாளர்களுடன் மாதத்திற்கு இருமுறை காணொளி காட்சி மூலம் அவர்களது தேவைகளை உடனுக்குடன் அறிவதோடு, அவர்களது பணியும் ஆய்வு செய்யப்படுகிறது.

(5) நில அளவைப் பதிவேடுகள் துறையில் இதுவரை 717 நில அளவர்களும், 416 வரைவாளர்களும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், 702 நில அளவர்களும், 53 வரைவாளர்களும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக மிக விரைவிலேயே புதியதாக தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இவர்களுக்கு புலத்திலும், கணினியிலும் பயிற்சி அளிக்கும் விதமாக அரசு ஆணை (நிலை) எண்.179, வருவாய்த்துறை, நாள் 22.04.2015–இல் ஏற்கனவே நில அளவைப் பதிவேடுகள் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற சார் ஆய்வாளர்களை நியமனம் செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இதுவரை 92 நபர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**(6)** கிராம/ வட்ட/ மாவட்ட வரைபடங்களை தமிழில் தயாரித்தல்

**2014–15–**ஆம் நிதியாண்டில் சட்டமன்ற பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் கிராம/ வட்ட/ மாவட்ட வரைபடங்களை தமிழில் தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. முழு ஈடுபாடுடன் நடைபெற்று வருகின்ற இப்பணி **2** ஆண்டுகளில் முடிவடையும் **.**



கணினிமயமாக்கப்பட்ட கிராம/ வட்ட/ மாவட்ட வரைபடங்கள் தமிழில் அனைத்து நிலைகளிலும் முடிக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பொது மக்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்படும். மேலும் இந்த வரைபடங்களை இணையதளம் மூலமாக பதிவிறக்கம் செய்யும் வசதிகளும் ஏற்படுத்தப்படும். முதல் முறையாக வெளியிடப்படவுள்ள தமிழ் மொழியிலான இந்த வரைபடங்கள் கிராம மக்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

## 6.5 நிலவரித்திட்டம்

தொன்றுதொட்டு நில உடைமையாளர்களிடமிருந்து, நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதியை அரசுக்குரிய பாகமாக பெறும் உரிமை இருந்து வந்துள்ளது. இதற்குரிய பரிமாற்ற பணமதிப்பை 'நிலவரி' என்றும் இதனை கணக்கிடும் முறையை 'வருவாய் நிலவரித்திட்டம்' என்றும் அழைக்கின்றோம். இரயத்துவாரி நிலவரித்திட்டத்தின் கீழ் மண்ணின் கூட்டமைப்பு, மண்ணின் பண்புகளுக்கேற்ப தரம் மற்றும் வகைகளாக பிரித்தல் மற்றும் மண்ணின் விளைவிக்கும் திறனை பாதிக்கக்கூடிய இதர காரணிகள் ஆகியவைகளின் அடிப்படையில் ''நிலவரி'' நிர்ணயம் செய்யப்படுகிறது.

ஆங்கிலேயர்கள் காலத்தில், குடியானவர்களிடமிருந்து ஜமீன்தாரர்கள் மற்றும் இனாம்தாரர்கள் நிலவரியை அதிகமான அளவில் வசூலித்ததாலும், மண்ணின் விளைவிக்கும் திறன் அடிப்படையில் வரி நிர்ணயிக்கப்படாததாலும், ஜமீன் எஸ்டேட்டுகளில் இருந்த குடியானவர்கள் பெரும்பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தார்கள். நிலவரிச் சுமையை குறைப்பதற்காகவும், குடியானவர்களிடமிருந்து அரசே நேரடியாக வசூலிப்பதற்காகவும் அந்த எஸ்டேட்டுகளில் இரயத்துவாரி நிலவரித்திட்ட முறை

அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை சாதிப்பதற்காக, பல இடைத்தரகர் ஒழிப்பு சட்டங்கள் இயற்றப்பட்டன.

1. தமிழ்நாடு எஸ்டேட்டுகள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1948 (தமிழ்நாடு சட்டம் 26/1948)
2. தமிழ்நாடு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)
3. தமிழ்நாடு குத்தகை உடைமை (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 27/1963)
4. தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)
5. தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)
6. தமிழ்நாடு வரியில்லா நிலங்களில் வரி விதித்தல் சட்டம் 1972 (தமிழ்நாடு சட்டம் 31/1973)
7. தமிழ்நாடு (மாற்றப்பட்ட பகுதி) இரயத்துவாரி நிலவரித்திட்ட சட்டம் 1964 (தமிழ்நாடு சட்டம் 30/1964)

தமிழ்நாடு சட்டம் 26/63–இன்கீழ் வரும் 10 எஸ்டேட்கள் மற்றும் தமிழ்நாடு சட்டம் 30/63–இன் கீழ் வரும் 5 கிராமங்களையும் தவிர இதர அனைத்து பகுதிகளிலும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு சட்டம்

**24/69–**இன் கீழ் நீலகிரி மாவட்டம் ஜென்மம் நிலங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

நிலவரித்திட்ட சட்டங்களின் கீழ் பணிகள் நிலுவையிலுள்ள விவரங்கள் பின்வருமாறு:

## I. தமிழ்நாடு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

தமிழ்நாட்டில் உள்ள இனாம் எஸ்டேட்டுகளில் இருந்த நில உடமையாளர்களின் உரிமையைக் கைப்பற்றவும், அந்த எஸ்டேட்டுகளில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த எஸ்டேட்டுகளில் பின்வரும் 10 எஸ்டேட்டுகளைத் தவிர, இதர அனைத்து எஸ்டேட்டுகளிலும் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டுவிட்டன. பல்வேறு நீதிமன்ற வழக்குகளினால் நிலவரித்திட்டப் பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்படவில்லை. தற்போது நீதிமன்ற வழக்குகள் முடிவுக்கு வந்த இனங்களில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## ஒவ்வொரு எஸ்டேட்/ கிராமத்தில் நடைபெறும் நிலவரித் பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:

| வ. எண். | கிராமத்தின் பெயர் | வட்டம் மற்றும் மாவட்டம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | அரையபுரம் தட்டிமால் படுகை | பாபநாசம் வட்டம் தஞ்சாவூர் மாவட்டம் | உச்சநீதிமன்ற வழக்கின் தீர்ப்புரையில் அரசின் அறிவிக்கை உறுதி செய்யப்பட்டவுடன் நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டன. நிலவரித்திட்ட பல கட்டப் பணிகளில் தற்போது களப்பணி மற்றும் உட்பிரிவு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சட்டமுறை விசாரணை மற்றும் தோராயப் பட்டா வழங்கும் பணி விரைவில் நடைபெறவுள்ளது. |
| 2 | சூரியநாராயணபுரம் | பட்டுக்கோட்டை வட்டம் தஞ்சாவூர் மாவட்டம் | தஞ்சை இனாம் ஒழிப்பு நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் வழக்குகளின் தீர்ப்புரைகள் அரசின் தமிழ்நாடு இனாம் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், **26/63–**ன் கீழான அறிவிக்கைக்கு எதிராக இருந்ததால் இக்கிராமத்தில் தமிழ்நாடு சிறு இனாம் சட்டம் 30/63.ன் கீழ் நிலவரித்திட்டம் அமுல்படுத்துவது குறித்து முன்மொழிவுகள் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| 3 | இராமச்சந்திரன் கோயில்பத்து | தரங்கம்பாடி வட்டம் நாகப்பட்டினம் மாவட்டம் | நீதிமன்ற வழக்கின் முடிவினை எதிர்நோக்கி நிலவரித்திட்டப் பணி நிலுவையில் உள்ளது. |
| 4 | கழனிவாய்ப்பட்டி | திருமயம் வட்டம் புதுக்கோட்டை மாவட்டம் | புதுக்கோட்டை இனாம் ஒழிப்பு நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் வழக்குகளின் தீர்ப்புரைகள் அரசின் தமிழ்நாடு இனாம் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், **26/63–**ன் கீழான அறிவிக்கைக்கு எதிராக இருந்ததால் இக்கிராமத்தில் தமிழ்நாடு சிறு இனாம் சட்டம் **30/63-**ன் கீழ் நிலவரித்திட்டம் அமுல்படுத்துவது குறித்து நில நிர்வாக ஆணையருக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது. |
| 5 | சென்னசந்திரம் | ஒசூர் வட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம் | சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசின் அறிவிக்கையை உறுதி செய்யப்பட்ட நிலையிலும் புதுதில்லி உச்சநீதிமன்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாலும், நிலவரித் திட்டப் பணிகளை மேற்கொள்ள நிலஅளவை ஆவணங்கள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. |
| 6 | திம்மசந்திரம் | | |
| 7 | உளியாளம் | | |
| 8 | பைரசந்திரம் | ஒசூர் வட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம் | இம்மூன்று கிராமங்களை தமிழ்நாடு சட்டம் **26/1963.**ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கை யிலிருந்து நீக்கம் செய்ய வரைவு நீக்க அறிக்கை நில நிர்வாக ஆணையர் மற்றும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. பின்னர் நிலவரித்திட்டப் பணி தொடங்கப்படும். |
| 9 | இளையசந்திரம் | | |
| 10 | மாரசந்திரம் | | |

## II. தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

தமிழ்நாட்டில் உள்ள சிறு இனாம்தாரர்களின் உரிமையை அரசு கைப்பற்றி அவற்றில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்த இச்சட்டம் வழி வகை செய்கிறது.

இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட இனாம் கிராமங்களில் பின் வரும் 5 கிராமங்களில் மட்டும் நிலவரித்திட்டப் பணிகள் நிலுவையில் உள்ளன. பல்வேறு நீதிமன்ற வழக்குகளுக்குப் பின் தற்போது நிலவரித்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:

| வ. எண் | கிராமத்தின் பெயர் | வட்டம் மற்றும் மாவட்டம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | காரணப்பட்டி | இலுப்பூர் வட்டம் புதுக்கோட்டை மாவட்டம் | நீதிமன்ற வழக்குகள் முடிவுக்கு வந்தபின் நிலவரித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு விவசாய நிலங்களுக்கு சட்டப்பூர்வ விசாரணை முடிக்கப்பட்டு, வீட்டு மனைகளுக்கான விசாரணைப்பணி நடவடிக்கையில் உள்ளது. |
| 2 | கோதண்டராமபுரம் | இலுப்பூர் வட்டம் புதுக்கோட்டை மாவட்டம் | நீதிமன்ற வழக்குகள் முடிவுக்கு வந்தபின் பல கட்ட நிலவரித்திட்ட பணிகள் முடிக்கப்பட்டு தூய ஆவணங்கள் ஒப்பிட்டு சரிபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| 3 | நிலையப்பட்டி | இலுப்பூர் வட்டம் புதுக்கோட்டை மாவட்டம் | நீதிமன்ற வழக்குகள் முடிவுக்கு வந்தபின் நிலஅளவைப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 4 | அகஸ்தியம்பள்ளி | வேதாரண்யம் வட்டம் நாகப்பட்டினம் மாவட்டம் | நீதிமன்ற வழக்குகள் முடிவுக்கு வந்தபின் நிலஅளவைப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 5 | தாரிக்கொம்பன் | இளையான்குடி வட்டம் சிவகங்கை மாவட்டம் | மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது. |

## III. தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)

நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் எஸ்டேட்டுகளில் ஜென்மிகளுக்கு இருந்த உரிமையை கைப்பற்றி அவ்வுடமைகளில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்த இச்சட்டம் வழி வகை செய்கிறது.

இச்சட்டத்தை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 9-வது இணைப்பில் சேர்க்கப்பட்டதை எதிர்த்து, சில குத்தகைதாரர்கள் மற்றும் ஜென்மிகள் உச்சநீதிமன்றத்தில் உரிமையியல் மேல்முறையீடு வழக்குகள் மற்றும் ரிட் மனுக்கள் தாக்கல் செய்தனர். இறுதியாக உச்சநீதிமன்ற மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு, இந்திய அரசியலமைப்பு சட்டம் 9–வது இணைப்பில் சேர்க்கப்பட்டதை உறுதி செய்து வழக்கு முடிக்கப்பட்டது.

**அட்டவணை 6.2 இதுவரை நிலவரித் திட்ட பணி முடிக்கப்பட்ட பரப்பளவு விவரம்:**

| வ. எண் | விவரங்கள் | விஸ்தீரணம் ( ஏக்கரில் ) |
|---|---|---|
| 1 | மொத்த ஜென்மம் நிலங்கள் | 80,087.74 |
| 2 | ஆரம்ப கட்டத்தில் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டது | 28,087.03 |
| 3 | பிரிவு 53–இன் கீழ் வனமாக அறிவிக்கப்பட்டது | 17,014.43 |
| 4 | வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டது | 11,204.47 |
| 5 | வனநிலமாக அறிவிக்கப்பட்ட நிலங்களில் நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட பகுதி | 5,809.96 |
| 6 | நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட வேண்டிய பரப்பு | 34,986.28 |

இச்சட்டத்தின் கீழ் வனமாக அறிவிக்கப்பட்ட **17,014.43** ஏக்கர் நிலங்களில் **5,809.96** ஏக்கர் பரப்பு நீதிமன்ற வழக்குகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதை தவிர்த்து அரசாணை **(நிலை)** எண் **363,** வருவாய் [நிஅ.**1(1)**] துறை, நாள் **28.11.2011**–இன்படி **11,204.47** ஏக்கர் பரப்பு வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிலவரித்திட்டம் அமல்படுத்தப்படவேண்டிய மீதமுள்ள **34,986.28** ஏக்கர் நிலம் தொடர்பாக, உயர்நீதிமன்றம் மனுதாரர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று பிரிவு **8(அ) 9**–இன் கீழ் பரிசீலிக்க நிலவரித்திட்ட அலுவலர் மாவட்ட வருவாய் அலுவலருக்கு உத்தரவிட்டது. அதன்படி நிலவரித்திட்ட அலுவலருக்கு (கூடலூர் ஜென்மம் நிலங்கள்) **546** மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன. அதன் தற்போதைய நிலை பின்வருமாறு:

| | |
|---|---|
| பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 546 |
| முடிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 388 |
| நிலவரித்திட்ட அலுவலரிடம் நிலுவையிலுள்ள மனுக்கள் | 158 |
| நிலவரித்திட்ட அலுவலரின் உத்தரவினை எதிர்த்து ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தில் (JAT) உதகமண்டலம் மேல்முறையீடு செய்யப்பட்ட மனுக்கள் | 307 |
| ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தால் தீர்ப்பு வழங்கப்பட்ட மனுக்கள் | 08 |
| ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தில் நிலுவையிலுள்ள மனுக்கள் | 299 |
| ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தின் உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட மனுக்கள் | 06 |

### 6.5.1 திட்டங்கள்

#### 6.5.1.1 நத்தம் நிலவரித்திட்டம்

அரசாணை (நிலை) எண்.1971, வருவாய்த்துறை, நாள் 14.10.1988–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில், மாநிலம் முழுவதும் (பழைய சென்னை நீங்கலாக) நத்தம் வீட்டு மனைப் பகுதிகளிலும் வேளாண்மைக்கு அல்லாத பிற காரணங்களுக்கு பயன்படுத்தப்படும் வேளாண்மை நிலங்களிலும் நிலவரித்திட்டப் பணிகளை செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி, 1999 ஆம் ஆண்டு வரையில், 12 வட்டங்களான கன்னியாகுமரி மாவட்டம் (4 வட்டங்கள்), நீலகிரி மாவட்டம் (6 வட்டங்கள்), காஞ்சிபுரம் மாவட்டம் (1 வட்டம்), திருவள்ளூர் மாவட்டம் (1 வட்டம்) மற்றும் சென்னை மாவட்டங்களில் சேர்க்கப்பட்ட 31 கிராமங்களைத் தவிர, இதர அனைத்து மாவட்டங்களில் இப்பணி முடிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் 2007–இல் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணி, கன்னியாகுமரி மாவட்டம் (4 வட்டம்), காஞ்சிபுரம் மாவட்டம் (1 வட்டம்) மற்றும் சென்னை மாவட்டத்தில் சேர்க்கப்பட்ட 31 கிராமங்களில் முடிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் இப்பணி

முன்னேற்றத்தில் உள்ளது. **1.4.2014** முதல் **31.7.2015** வரை **9,549** மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.5.1.2 மலை கிராமங்களில் வருவாய் பின் தொடர் பணி

அரசாணை (நிலை) எண்.**113**, வருவாய்த்துறை, நாள் **02.02.1995**–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் **67** மலை கிராமங்களில் வருவாய் பின் தொடர் பணி தொடர அரசு ஆணை பிறப்பித்தது. இதில், **60** மலை கிராமங்களில் இப்பணி முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், பச்சமலை கிராமத்தில் விவசாய நிலங்களுக்கு பட்டா வழங்கும் பணி முடிவுற்று மனைப் பகுதிகளில் பட்டா வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், ஆனைமலைக்குன்றுகள் கிராமம், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டத்திலுள்ள **4** மலைக்கிராமங்கள், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஏலகிரி மலை கிராமம் ஆகியவைகளில் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**6.5.1.3 நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் வருவாய் பின் தொடர் பணி**

அரசாணை (1டி) எண்.103, வருவாய் [நிஅ.2(1)] துறை, நாள் 1.3.2007–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் (சென்னை பழைய நகரம் தவிர) வருவாய் ஆவணங்களின் பதிவுகளை இன்றைய நிலையில் மேம்படுத்தவும் நில உடமைதாரர்களுக்கு பட்டா வழங்கவும் ஆவணங்கள் தயார் செய்து மாவட்ட வருவாய் நிருவாகத்தின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கவும் வருவாய் பின் தொடர்பணி தொடங்க அரசால் உத்தரவிடப்பட்டது.

மொத்தமுள்ள 123 நகராட்சிகள் மற்றும் 12 மாநகராட்சிகளில், இப்பணி 7 நகராட்சிகளில் முடிக்கப்பட்டுள்ளது. நிலவரித்திட்ட வட்டாட்சியர்களால் 74 அலகுகளில் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி 5 மாநகராட்சிகளில் 9 அலகுகளிலும் 65 நகராட்சிகளிலும் நடைபெற்று வருகிறது. தற்போது நடைபெற்று வரும் அலகுகளின் பணி முடிக்கப்பட்டவுடன் மீதமுள்ள பகுதிகளில் பணி துவங்கப்படும்.

**1.4.2014** முதல் **31.7.2015** வரை **3,11,470** பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**6.6 வக்ஃப் சொத்து கணக்கெடுப்புப் பணி**

வக்ஃப் கணக்கெடுப்பு ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் வக்ஃப் கூடுதல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட வருவாய் அலுவலர்களால் அவர்களது ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு பணி மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது. இப்பணி இதுவரை **5** மாவட்டங்களில் முடிக்கப்பட்டு இதர மாவட்டங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**ஆர்.பி. உதயகுமார்**
வருவாய்த் துறை அமைச்சர்